29 MAY 1965

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 27	மே 1965	இதழ் 5

சீனாவின் பாதையில் பாகிஸ்தான்!

1962ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், ஏகாதிபத்திய வெறி பிடித்த சீனா இந்தியத் திருநாட்டின் வட எல்லைமீது அககிரமமான முறையில் படையெடுததது.

1965ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், போர் வெறிக்கு இரையாகிவிட்ட பாகிஸ்தான், நம்மைப் பெற்ற பொன்னாட்டின் மேற்கு எல்லைமீது அநியாயமான வகையில் படையெடுத்திருககிறது.

அந்நாளில் சீனா எத்தகைய அக்கிரமத்தை — அநீதியை — ஆணவப்போக்கைக் கையாண்டதோ, அந்த வகையான அநியாயத்தை — ஆக்கிரமிப்பை — ஆகா நெறியை இந்நாளில் பாகிஸ்தான் கையாள்கிறது.

அன்று சீனநாட்டுத் தலைவர்கள் மேற்கொண்ட போக்கு, உலக அமைதிக்கே உலைவைக்கக்கூடிய தன்மையது என்பதை எடுத்துக் காட்டி, உலகத் தலைவர்கள் அனைவரும் சீன ஏகாதிபத்தியத்தின் சீரழிந்த போக்கை மிக வன்மையாகக் கண்டித்தார்கள்.

சீனு அன்று கையாண்ட பாதை உலகம் முழுவதாலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட பாதை என்பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்திருந்தும், ஐயோ பாவம், பாகிஸ்தான், இன்று அதே பாதை யில் முழுமூச்சுடன் நடைபோடத் தொடங்கியிருக்கிறது.

மஞ்சள் ஏகாதிபத்தியமாகிய சீனு வஞ்சக வலை விரித்த நேரத் தில் எவ்வாறு இந்திய மக்கள் யாவரும், தங்களிடையே இருந்துவந்த சமய வேற்றுமை—மொழி வேற்றுமை—கட்சி வேற்றுமை—கருத்து வேற்றுமை யாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஒன்றுகத் திரண்டு ஓரே அணியில் நின்று, புதிய ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை முறித்துத்தள்ள முரசு கொட்டினர்களோ, அப்படித்தான் அண்டை நாட்டுப் பாகிஸ்தானின் அநியாய ஆக்கிரமிப்பு தொடங்கியுள்ள இந்த நேரத்திலும், அந்த ஆக்கிரமிப்பைத் தொகையாக எதிர்சிறுத் தித் தூள்தூளாக்கிடத் துடித்து நிற்கிறர்கள்—ஓரே குரலில்; ஓரே அணியில்.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் ஒன்று குஜராத். இந்தக் குஜராத் மாநிலத்தின் வடக்குப் பகுதியில் கட்ச் என்னும் வட்டாரம் இருக்கிறது. தற்போது குஜராத் மாநிலத்தின் ஒரு பகுதியாக உள்ள 'கட்ச்' என்னும் இந்த வட்டாரம், இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னுல், பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு பகுதி யாக—ஆனுல் மன்னர் ஒருவரால் ஆளப்பட்ட ஒரு சிற்றரசாக (சமஸ்தானமாக) இருந்து வந்தது. 1947ஆம் ஆண்டில் இந்தியத் துணைக்கண்டம், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டபோது, இந்த 'கட்ச்' என்னும சிற்றரசு இந்தியாவைச் சேர்ந்தது என்று அறிவிக்கப்பட்டது.

கட்ச் வட்டாரத்தைச் சேர்ந்தாற்போல அதன் வடபுறத்தே அமைந்திருப்பது சிந்து மாநிலம். நாட்டுப் பிரிவினையின்போது இம்மாநிலம் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்டது.

கட்ச் வட்டாரத்தின் வடக்குப் பகுதியில், ஏறத்தாழ ஐம்பது மைல் அகலத்திற்கு, 'ரண்' என்று அழைக்கப்படும் ஒருவகை விசித் திரமான சதுப்பு நிலம் இருக்கிறது. மழைக் காலத்தில், சுழன்ற டிக்கும் சூறுவளி—மாபெரும் அலைகள் ஆகியவற்றின் விளைவாக, அரபிக் கடலின் நீர் இந்நிலத்தில் புகுந்து, இந்நிலம் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கும். பொங்கி யெழுந்து பரவியுள்ள

இக்கடல் நீரோடு சில சமயங்களில் சில ஆறுகளின் நீரும் கலந்து விடுவதுண்டு. ஏறத்தாழ மே மாத நடுவிலிருந்து அக்டோபர் திங்கள்வரை இந்நிலைமை நீடிக்கும். அக்டோபருக்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக நீர் வடிந்து, ஏனைய மாதங்களில் இந்நிலம் சேறும் சகதியும் உவரையும் மிகுந்த சதுப்பு வட்டாரமாகக் காட்சி அளிக்கும். இத்தகைய விபரீத இயல்பு படைத்த இந்த நிலத்தை, கட்ச் வட்டாரத்து மக்கள், அவர்களுடைய மொழியில் ரண் என்று அழைக்கிறார்கள்.

இந்த ரண் நிலத்தின் வடக்குப் பகுதி தங்களுடையது என்று சொல்லிக்கொண்டு, பாகிஸ்தான் அரசாங்கத்தினர், ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளன்று, தங்கள் படைவரிசை ஒன்றை அங்கே அனுப்பி, அதன் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தானின் பண்பற்ற இச்செயல், நியாயம் துளியும் அற்ற ஆக்கிரமிப்பு என்பதை, நடுநிலை உள்ளம் படைத்த எவரும் மறுத்தல் இயலாது.

ரண் வட்டாரம் முழுவதும் கட்ச் சிற்றரசின் ஒரு பகுதியாகத் தான் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. சிந்து மாநிலத்தின் ஒரு பகுதியாக அது எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. ரண் முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ சிந்து மாநிலத்தைச் சேர்ந்ததாக இருக்குமானால், அதில் பாகிஸ்தானுக்கு உரிமை இருக்க முடியும். ஆனால் அது எந்தக் காலத்திலும் சிந்து மாநிலத்தைச் சேர்ந்ததாக இல்லாததால், அதில் பாகிஸ்தானுக்கு எந்தவித உரிமையும் இருக்க முடியாது என்பது வெள்ளிடைமலை.

ரண் வட்டாரம் முழுவதும் கட்ச் சிற்றரசைச் சேர்ந்ததாக இருந்துவந்ததாலும், அந்தக் கட்ச் சிற்றரசு முழுவதும் இந்தியாவுக்குச் சொந்தமாக இருப்பதாலும், ரண் வட்டாரம் முழுவதும் இந்தியாவினுடையதே என்பது, தெள்ளத் தெளிவாகத் தெரியும் உண்மை.

பாகிஸ்தான் பிறப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால், 1907ல், அப்போது இந்தியாவில் நடைபெற்றுவந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தால், கராச்சியிலிருந்து வெளியிடப்பட்ட சிந்து மாநில அதிகாரபூர்வமான கெஜட், அந்த மாநிலத்தின் எல்லைகள் எவை எவை என்பதை வரையறுத்துக் கூறியிருக்கிறது. அப்படிக் கூறும் போது, அந்தக் கெஜட், அந்த மாநிலத்திற்குத் தெற்கே, அந்த மாநிலத்தைச் சேராத பகுதியாக இருப்பது ரண் வட்டாரம் என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறது. ஆகவே, கட்ச் சமஸ்தானத்து ரண் வட்டாரம் முழுவதும் சிந்து மாநிலத்தைச் சேராத ஒன்று—கட்ச் சமஸ்தானத்துக்கு மட்டுமே உரிமையுடைய ஒன்று என்னும்

உண்மை, 1907ஆம் ஆண்டிலேயே, அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்ட ஒன்றாக இருக்கிறது.

1909ல், பம்பாய் மாநில வரிசை என்னும் தலைப்பில் அன்றைய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட இந்திய இம்பீரியல் கெஜட்டும், இந்த உண்மையைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

1915
1923
1936
1945

ஆகிய ஆண்டுகளில், இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட இந்திய நாட்டுப் படங்கள் அத்தனையிலும், ரண் பிரதேசம் சிந்து மாநிலத்திற்குப் புறம்பே இருப்பதாகவும், கட்ச் சிற்றரசின் ஒரு பகுதியாகவுமே காட்டப்பட்டிருக்கிறது.

1938ல் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இந்திய சர்வே அதிகாரி, கட்ச் சிற்றரசுக்கும் சிந்து மாநிலத்திற்கும் இடையே உள்ள வடக்குப் பகுதி, தகராறுக்கு இடமானது என்று தவறாகக் குறித்துவிட்டார் என்பது உண்மைதான். ஆனால் அடுத்த ஆண்டிலேயே, அவர் செய்தது தவறு என்பது கண்டுபிடிக்கப்பட்டு, தகராறுக்கு இடமானது என்னும் அந்தக் குறிப்பு உடனே நீக்கப்படவேண்டும் என்று இந்தியாவின் பிரிட்டிஷ் அரசாங்க நாட்டுப்பட இயக்குநரால் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் தலைமை அமைச்சர் திருவாளர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களால் இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப் பட்டிருப்பதுபோல, கட்ச் சிற்றரசின் ரண் பகுதி சிந்து மாநிலத்தைச் சேராத ஒன்று என்னும் உண்மை, 1872லிருந்து 1943வரை அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்திய நாட்டுப் படங்கள் அத்தனையிலும் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே அந்த ஆண்டுகளில் வரையப்பட்டுள்ள அரசாங்க ஆவணங்கள் (தஸ்தாவேஜிகள்) அத்தனையிலும் இந்த உண்மை ஐயம்திரிபுக்கு இடமின்றித் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

ரண் வட்டாரத்தின் வடபகுதி தங்களுடையது என்று சொல்லிக்கொள்ளும் பாகிஸ்தான் அரசாங்கம், அந்த அடாவடிக் கோரிக்கைக்கு ஆதாரமாக இதுவரை கூறியுள்ள முக்கியமான காரணம் ஒன்றே ஒன்றுதான். ரண் வட்டாரம், நிலப் பரப்பால் சூழப்பட்ட ஒரு கடல் அல்லது ஓர் ஏரி என்பதும், அனைத்து

நாட்டுச் சட்டப்படி இரண்டு நாடுகளுக்கு இடையே ஒரு கடலோ அல்லது ஓர் ஏரியோ இருக்குமானால், அந்த நாடுகளின் எல்லைக்கோடு அந்தக் கடல் அல்லது ஏரியின் நடுப்பகுதியில் இருக்கவேண்டும் என்பதும், எனவே ரண் வட்டாரத்தின் நடுக்கோட்டிற்கு வடக்கே இருக்கும் பகுதி தங்களுடையது என்பதும்தான் அந்தக் காரணம்.

இந்தக் காரணம் சிறிதும் பொருத்தமற்ற ஒன்று என்பது தெளிவு. ரண் வட்டாரத்தை ஏரி என்றோ கடல் என்றோ கூறுவது பொருந்தாக் கூற்று என்பதையும், அது ஒரு சதுப்பு நிலமே என்பதையும் நடுநிலையாளர் எவரும் தயங்காது கூற முடியும். 1906ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினையை அலசி ஆராய்ந்த இந்திய அரசாங்கம் (அதாவது அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்க நிர்வாகம்), ரண் பகுதி சதுப்புநிலப் பகுதிதான்—கடற்பகுதியோ ஏரியோ அல்ல என்று முடிவுகட்டி அறிவித்திருக்கிறது.

இந்த உண்மைகளையும் செய்திகளையும் உள்ளத்தில் நிறுத்தி, நிலைமைகளை நேர்மையாக ஆராய்ந்து பார்க்கும் அத்தனைப் பேரும், ரண் வட்டாரம் முழுவதும் இந்தியாவிற்கே உரியது என்பதையும், அங்கே பாகிஸ்தானின் துருப்புகள் நுழைந்திருப்பது அப்பட்டமான ஆக்கிரமிப்பு என்பதையும், திட்டவட்டமாக ஒப்புக்கொள்வார்கள்.

தன்னுடைய ஆக்கிரமிப்புச் செயல், அநீதி மிகுந்தது—ஆணவம் நிரம்பியது—ஆகாத வழியில் அமைந்தது—அமைதி நெறிக்கும் ஒழுங்குமுறைக்கும் அறவழிக்கும் மாறுபட்டது என்னும் உண்மைகள் யாவும் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு அழுத்தந்திருத்தமாகத் தெரிந்திருக்கும் என்பதில் துளியும் ஐயம் இல்லை.

தான் செல்லும் பாதை தவறான பாதை என்பதைத் தெளிவாக அறிந்திருந்தும், அந்தப் பாதையில், அளவற்ற ஆர்வத்தோடும் எல்லையற்ற மகிழ்ச்சியோடும் வேகவேகமாக நடைபோடுகிறதே பாகிஸ்தான்—இதற்கு என்ன காரணம்? எவரும் கேட்பர் இக் கேள்வியை.

பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு வெறியாட்டத்தின் உண்மையான நோக்கம் யாது என்பது, அந்த நாட்டின் சர்வாதிகாரியாகத் திகழ்கிற தளபதி அயூப்கானின் உள்ளத்திற்கு உள்ளே மறைந்துகிடக்கிற ஒரு புதைபொருளாகும். அதனை நாம் திட்டவட்டமாக அறிந்து தெரிவித்தல் இயலாத செயல். ஆனால் இன்னின்னவைதான் அந்த ஆக்கிரமிப்பின் நோக்கங்களாக இருக்கக்கூடும் என்பதை நாம் ஒருவாறு உய்த்து உணர முடியும்.

பாகிஸ்தானின் ஆட்சிப் பீடத்தைத் தளபதி அயூப்கான் கைப்பற்றிய நாளிலிருந்து அந்த நாட்டில் ஜனநாயக முறைப்படி அமைந்த ஆட்சி நடைபெறவில்லை. தளபதி அயூப்கான் வைத்ததே சட்டம்—இட்டதே கட்டளை என்பது போன்ற நிலைமைதான் அங்கே இருந்து வருகிறது. சுருக்கமான முறையில் கூறவேண்டுமானால் ஒருவித சர்வாதிகார ஆட்சி அங்கே நடைபெறுகிறதே தவிர ஜனநாயக ஆட்சி நடைபெறவில்லை. அரசியல் விழிப்புணர்ச்சியும் கட்டுக்காவலற்ற சிந்தனையும் உரிமை வேட்கையும் விடுதலைத் தாகமும் மக்கள் மன்றத்தில் பெருவளர்ச்சி பெற்றுள்ள இந்தக் காலத்தில் இத்தகைய சர்வாதிகார ஆட்சி முறையைப் பாகிஸ்தான் மக்கள் விரும்பமாட்டார்கள் என்பது தெளிவு. அண்டை நாடாகிய இந்தியாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுத்தேர்தல் நடைபெறுவதையும், பல்வேறு அரசியல் கட்சிகள் சுதந்தரமான முறையில் அத்தேர்தலில் ஈடுபடுவதையும், பெரும்பாலான இடங்களைப் பெறுகிற கட்சி ஆட்சிப்பீடம் ஏறுவதையும், தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறவும் எழுதிப் பரப்பவும் மக்களுக்கு உரிமைகள் இருப்பதையும். இத்தகைய விரிவான தேர்தல் முறையும் சுதந்தர நிலைமையும் தங்கள் நாட்டில் இல்லாததையும் காண்கிற பாகிஸ்தான் மக்களிடையே, அதிருப்தி அலைகளும் வெறுப்புணர்ச்சியும் பரவலாக இருப்பது இயற்கை. அண்மையில் அந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது, அத்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளரும், பாகிஸ்தானின் தந்தை ஜனாப் ஜின்னாவின் தமக்கையும் ஆகிய திருமதி ஜின்னா, நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, ஆயிரமாயிரமாக மக்கள் திரண்டு குழுமிய கூட்டங்களில், அயூப்கான் கட்சியின் குறைபாடுகளை விளக்கிக்கூறி, ஜனநாயகக் கோட்பாட்டின்மீது மக்களுக்கு உள்ள ஆர்வத்தை மேலும் கொழுந்துவிட்டு எரியச் செய்துள்ளார்.

இவ்வாறெல்லாம் பாகிஸ்தானின் ஆட்சிமீது அந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பையும் கசப்பையும் திசை திருப்பிவிட்டு, அவர்களுடைய கவனத்தை அந்தப் பிரச்சினைகளிலிருந்து வேறு பக்கத்திற்கு மாற்றியாகவேண்டும் என்று அதிபர் அயூப்கான் கருதியிருக்கக்கூடும். மக்களின் கவனத்தைத் திசை திருப்பிவிடுவதற்குச் சரியான வழி இந்தியாவின்மீது படையெடுத்து, மக்களுடைய வெறுப்புணர்ச்சியை அந்நாட்டின்மீது பாயவிடுவதே என்பது அதிபர் அயூப்கானின் தந்திரமாக இருக்கக்கூடும்.

இந்தியாவின்மீது சீனா படையெடுத்த காலத்திலிருந்தே சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நெருக்கமான உறவும் தொடர்பும் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பொருந்தாக் காமத்தின் விளைவாக, இந்தியாமீது படையெடுக்கும்படி சீனா பாகிஸ்தானத்

தைத் தூண்டியிருக்கக்கூடும். அல்லது இந்தியாவின்மீது படையெடுத்து அந்த நாட்டை வீண் தொல்லைக்கும் போர்ச் சூழ்நிலைக்கும் உள்ளாக்குவது சீன நாட்டின் தலைவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஊட்டக்கூடும் என்று எண்ணி, பாகிஸ்தானே முன்வந்து இந்த ஆக்கிரமிப்பை நடத்தியிருக்கக்கூடும். சீனா ஒருபுறத்திலிருந்தும், பாகிஸ்தான் மற்றொரு புறத்திலிருந்தும் இந்தியாவைத் தாக்க வேண்டும் என்று அந்த இரு நாடுகளுக்கு இடையே இரகசிய உடன்பாடு ஏதேனும் உருவாகி, அந்த உடன்பாட்டின் முதற்பகுதியாகப் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருந்தாலும் இருக்கலாம்.

இந்தியாவின் படைபலம் சென்ற சில ஆண்டுகளில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைச் சோதித்து அறிவதற்கும், இந்தியாவின் படைவலிமையோடு தன் படை வலிமையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், பின்னால் காஷ்மீர் சிக்கல் காரணமாகவோ வேறு சிக்கல் காரணமாகவோ இந்தியாவுக்கும் தனக்கும் இடையே பெரும் அளவில் போர் மூளுமானால் அப்போரில் தன்னால் எந்த அளவு ஈடுகொடுக்க முடியும் என்பதைக் கண்டறிவதற்கும் பொருத்தமான வழி, சிறிய அளவுடைய எல்லைப் போர் ஒன்றைத் தொடங்குவதே என்று பாகிஸ்தான் அரசாங்கம் கருதியிருக்கலாம் என்றும் நாம் உய்த்துணர முடிகிறது.

பாகிஸ்தானின் உள்நோக்கம் எதுவாக இருந்தபோதிலும் சரி, அது இந்திய மேற்கு எல்லையில் தொடங்கியுள்ள படையெடுப்பு துளியளவும் நியாயமற்ற ஆக்கிரமிப்பு என்பதும், கட்ச் ரண் பகுதி முழுவதும் இந்திய நாட்டிற்கே உரியது என்பதும், பாகிஸ்தானுக்கு அங்கே எத்தகைய உரிமை இல்லை என்பதும், தெளிவாகத் தெரிகிற உண்மைகள். இத்தகைய நிலைமையில் இந்திய அரசாங்கத்தின் கடமை என்ன என்பதில் எத்தகைய கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது. இந்திய மண்ணில் நுழைந்துவிட்ட பாகிஸ்தான் படைகளை உடனடியாக அங்கிருந்து விரட்டியடிப்பதே நம் அரசாங்கத்தின் முதற்பெருங் கடமை என்பதில், யாருக்குத்தான் ஆகட்டும், ஐயம் எப்படி இருக்க முடியும்?

இந்தப் புனிதமான கடமையை இந்திய அரசாங்கம் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றி வைக்கும் என்பதில் நமக்கு முழு நம்பிக்கை உண்டு. இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் இந்திய மக்கள் அனைவரும் இந்திய அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதிலும் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

நம்மைப் பெற்றெடுத்த பொன்னாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவதைவிடத் தூய்மையான பணியோ அவசரமான தொண்டோ இந்திய மக்களுக்கு வேறென்ன இருக்கமுடியும்?

காலமும் கருத்தும்

வேலூர் மன்றம் வகுத்த வழி.

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேலூரின் நகராட்சி மன்றம், ஓர் அருமையான வழியை வகுத்திருக்கிறது. அந்த வழி, ஏனைய நகராட்சி மன்றங்கள் யாவற்றாலும் பின்பற்றப்பட வேண்டிய வழி; எழிலும் ஏற்றமும் பொருந்திய வழி. அந்த வழி, நகராட்சி மன்றங்களால் மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் அத்தனையாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய வழி; செம்மையும் சிறப்பும் வாய்ந்த வழி. அந்த வழி, மத்திய உணவுத் திட்டத்தை மாண்புமிக்க முறையில் நடத்திச் செல்வதற்கு உரிய வழி; நல்லறிவாளர்கள் அனைவரும் ஒருங்கே ஏற்றுக் கொள்ளக் கூடிய உயர்ந்த வழி.

வேலூர் நகராட்சி மன்றத்தால் முப்பத்தைந்து தொடக்கப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிக் கூடங்களின் மதிய உணவுத் திட்டத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு, இதுவரை அவற்றின் தலைமையாசிரியர்களிடமும் பிற ஆசிரியர்களிடமும் இருந்துவந்தது. அரசாங்கம் தருகிற பண உதவியையும் பொது மக்களிடமிருந்து திரட்டப்படுகிற நன்கொடையையும் வைத்துக் கொண்டு அவர்கள் இதுவரை இத் திட்டத்தை நடத்தி வந்துள்ளனர். இந்த நிலைமையை இனியும் நீடிக்க விடக் கூடாது என்று கருதிய வேலூர் நகராட்சி மன்றம், வருகிற கல்வி ஆண்டிலிருந்து மதிய உணவுத் திட்டத்திற்கான பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்திருக்கிறது. இனி இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நகராட்சி மன்ற ஆணையாளரைச் செயலாளராகக் கொண்ட பன்னிருவர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மதிய உணவுத் திட்டத்திற்கான நன்கொடை திரட்டும் பணியையும், திட்டத்தை நடத்திச் செல்லும் பொறுப்பையும் ஆசிரியர்களிடமிருந்து நகராட்சி மன்றமே ஏற்றுக் கொள்வது—என்கிற இந்த முடிவைத்தான் செம்மையும் சிறப்பும் சான்ற வழி என்று நாம் கருதுகிறோம். மதிய உணவுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம், மிக உயர்ந்தது மிகச் சிறந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. பள்ளிக்கூடத்திற்கும், பிள்ளைகளின் வீடுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க தூரம் இருப்பதால் எல்லாப் பிள்ளைகளாலும் மதிய உணவுக்காகத் தங்களுடைய வீடுகளுக்குச் சென்று வர முடிவதில்லை.

பல பிள்ளைகளின் பெற்றோர்கள் பரம ஏழைகளாக இருக்கும் காரணத்தால், நண்பகல் வேளையில் அப் பிள்ளைகள் தம் வீடுகளுக்குச் சென்றாலும், அங்கே அவர்களுக்குத் தேவையான அளவு உணவு கிடைப்பதில்லை. நண்பகல் உணவு கிடைக்க முடியாத காரணத்தால் பல பிள்ளைகள் பள்ளிப் படிப்பைக் கைவிடவேண்டி யிருக்கிறது—என்கிற அவல நிலை நாட்டில் இருத்தல் கூடாது அல்லவா? எனவே தான் ஏழைப் பிள்ளைகள் யாவருக்கும் நண்பகல் உணவைப் பள்ளிக்கூடத்திலேயே இலவசமாக அளிப்பது என்கிற திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. போற்றிப் புகழப்பட வேண்டிய பொன்னான திட்டம் இது. மறப்பாரில்லை. ஆனால் பெரும்பாலான இடங்களில், இந்தத் திட்டத்தை நடத்திச் செல்லும் பொறுப்பும், இந்தத் திட்டத்திற்குத் தேவையான பணத்தின் ஒரு பகுதியைப் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கும் பணியும் ஆசிரியர்களிடம் விடப்பட்டிருக்கிறது. வீதி வீதியாகச் சென்று, ஓரளவு வசதியுடைய பெற்றோர்களையும் பெரிய மனிதர்களையும் கண்டு, நிலைமையை எடுத்தெடுத்துக் கூறிச் சிறிது சிறிதாக நன்கொடையைத் திரட்டுவதில் ஏராளமான ஆசிரியர்களுடைய நேரமும் நினைப்பும் ஆற்றலும் ஆர்வமும் செலவிடப்பட்டு விடுகின்றன. சிலபல ஊர்களில் சமையல் செய்யும் பணியும் ஆசிரியர்கள்மீதே விழுந்து விடுகிறது. இவ்வாறெல்லாம் ஆசிரியப் பெருமக்களுடைய சிந்தனையும் ஆற்றலும் மதிய உணவுத் திட்டத்தின் பக்கமே திரும்பி விட்டால், அவர்களுடைய முதற்பெரும் பணியாகிய கல்விப் பயிற்சியை அளிப்பதில் அவர்களுடைய முழுக் கவனமும் செல்லமுடியாது அல்லவா? செல்ல முடியாத நிலையில் அவர்களால் அளிக்கப்படுகிற கல்வி, சிறந்த தரம் படைத்ததாக இருக்கமுடியாது அல்லவா? எனவேதான், மதிய உணவுத் திட்டத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு—அது எவ்வளவுதான் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாக இருந்தபோதிலும்—ஆசிரியர்களிடம் விடப்படக்கூடாது என்பதை நம் "**ஆரம்பக் கல்வி**" அடிக்கடி எடுத்துக்கூறி வந்திருக்கிறது.

மதிய உணவுத் திட்டமும் சிறப்பாக நடைபெற வேண்டும்—கல்வியின் தரமும் உயர்ந்ததாக இருக்கவேண்டும். இந்த இரு நோக்கங்களும் நிறைவேற வேண்டுமானால், கல்வியை வழங்கும் பொறுப்பு மட்டுமே ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். மதிய உணவை வழங்கும் பொறுப்பு, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்ற ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் முதலிய உள்ளாட்சி மன்றங்களிடம் விடப்படவேண்டும். இதனை, இதனால், இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை, அவன்கண் விடல்”

என்பது, வள்ளுவப் பெருந்தகை யின் தெள்ளுதமிழ்மொழியாகும். இந்த அமுத மொழி காட்டும் அரிய வழிப்படி நடக்க முடிவு செய்துள்ளது வேலூர் நகராட்சி மன்றம். அம் மன்றத்திற்கு நம் மனமார்ந்த பாராட்டுதல் உரியது. இதே வழியை ஏனைய நகராட்சி ஊராட்சி மன்றங்கள் யாவும் பின் பற்ற வேண்டும் என்பதும், அப் படிப் பின் பற்றுவதற்குத் தேவையான ஆக்கத்தையும் ஊக் கத்தையும் தமிழக அரசு அளிக்க வேண்டும் என்பதும் நம் பணி வார்ந்த வேண்டுகோள்.

அறிவியல் அறிஞரின் அபாய அறிகுறி

தங்களுடைய அறிவின் ஆற்ற லால் உலக அரங்கத்தில் இந்திய நாட்டுக்குப் பெரும் புகழை ஈட் டித் தந்துள்ள பேரறிஞர்கள் சிலர். அவர்களில் தலைசிறந்த பெருமக னார் சர். சி. வி ராமன் என்பது, நாடு நன்கறிந்த ஓர் உண்மை. அந்த அறிவுலக மேதை, நோபல் பரிசு பெற்ற நல்லறிவாளர்; விஞ் ஞானத் துறையில் இணையற்ற புலமை படைத்தவர்; கல்வித் துறையிலும் ஆழ்ந்து அகன்ற அனுபவம் உடையவர் அத்தகைய அறிஞர் பெருந்தகை, அண்மை யில் ஓர் அபாய அறிகுறி காட்டி யுள்ளார். அறிவியல் மேதை காட்டியுள்ள அபாய அறிகுறி என்பதால் அதற்கு உரிய முழு மதிப்பையும் அளிப்பது அரசாங் கத்தின் தனிப்பெருங் கடமை யாகும்.

“உயர் நிர்வாகத்திலும், கல்வியிலும், அறிவியல் துறை யிலும், ஆங்கிலத்திற்கு மாறாக இந்தியைக் கொண்டு வருவது. இந்தியாவுக்குப் பெருந் தீங்காக முடியும்” என்று சர் சி. வி ராமன் அவர் கள், பெங்களூரில் இயங்கிவரும் ஆங்கில ஆதரவுக் குழுவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். குறிப்பாக வும் சிறப்பாகவும் இந்திய அர சாங்கத்தின் ஆட்சி மொழி என் னும் இடத்தை, அதற்குத் தேவை யான எல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ள. ஆங்கில மொழியிட மிருந்து பறித்தெடுத்து, அதற்கு உரிய எந்தத் தகுதியையும் பெற் றிராத இந்தி மொழிக்குத் தான மாகத் தருவது, இந்தியாவின் எதிர்காலத்திற்கு இணையற்ற கேட்டினை விளைவிக்கும் செயல் என்பதை இதுவரை எண்ணற்ற அறிஞர்களும் கல்வித்துறை வல் லுநர்களும் எடுத்துக்கூறியுள் ளார்கள். இப்போது விஞ்ஞான மேதை சர் சி. வி. இராமனும் ஐயம் திரிபு அற்ற முறையில் இந்த அபாய அறிகுறியைக் காட்டியுள்ளார் இனியாவது இந்திய அரசாங்கம் நிலை மையை உணருமா? ஆங்கிலம் மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருப்பது எவ்வளவு இன்றியமை யாதது என்பதை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இனியாவது ஏற் றுக் கொள்வார்களா? ஏற்றுக் கொண்டால்தான் இந்த நாட்டின்

எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்கும்.

முதலமைச்சர் அளித்துள்ள முதல்தரமான கருத்து

இனி தமிழகத்தில் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதைப் பொறுத்தவரை அரசினர் மெதுவாகச் செல்வதையே விரும்புகிறார்கள் என்று தமிழக முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் சில வாரங்களுக்கு முன் தெரிவித்துள்ளார்கள். பொருத்தமான நேரத்தில் அளிக்கப்பட்டுள்ள சிறப்புமிக்க கருத்து இது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் ஏறத்தாழ அறுநூறு புதிய உயர் நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை இவ்வாறு மடமடவென முன்னேறிச் செல்வது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் நிலைமை என்பது உண்மைதான். ஆனால் அவ்வாறு வேக வேகமாகத் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் அத்தனையும் போதுமான வசதிகளோடு இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்க்கும் போதுதான், முதலில் ஏற்பட்ட மகிழ்ச்சி மங்கத் தொடங்கி விடுகிறது. புதிதாகத் தொடங்கப்பட்ட பல உயர் நிலைப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லை. தேவையான விளையாட்டுத் திடல்கள் இல்லை. போதிய அளவு மாணவர்கள் சேர்வதற்குரிய சூழ்நிலையும் இல்லை. ஒவ்வோர் உயர் நிலைப் பள்ளியும் உண்மையிலேயே அதற்குரிய தேவை இருக்கும் ஊரில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. அரசியல் உலகில் செல்வாக்கு மிக்கவர்கள் வற்புறுத்திக் கேட்கிறார்கள் என்னும் காரணத்திற்காகப் பல இடங்களில், உண்மையான தேவை இல்லாமல் இருந்துங்கூட, உயர் நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறெல்லாம் அவசர அவசரமாகவும், தேவையான வசதிகளைத் தேடிக் கொள்ளாமலும், அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவும் பல உயர் நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருப்பதால், அவற்றால் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் சற்றுத் தாழ்ந்ததாகத்தான் இருக்கிறது. வருந்தத் தக்க இந்த நிலை மாற வேண்டுமானால், சில ஆண்டுகளுக்காவது புதிய உயர்நிலைப் பள்ளிகளை வேக வேகமாகத் தொடங்கும் பணியைச் சற்று நிறுத்தி வைத்து, ஏற்கெனவே உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கி, அவற்றின் தரத்தை உயர்த்தும் தொண்டில் மிகுந்த கவனம் செலுத்தப்படவேண்டும். அகலமாக உழுதால் மட்டும் போதாது; ஆழமாகவும் உழுதாக வேண்டும் அல்லவா? அப்படி உழுதால்தானே பட்டபாட்டிற்கு ஏற்ற பயனை அறுத்தெடுக்க முடியும்? இந்த அடிப்படை உண்மையைத் தெளிவாக உணர்ந்து,

(13–ம் பக்கம் பார்க்க)

கவிஞர் தாகூர்

அடிமை இருளில் மூழ்கியிருந்த பாரத நாட்டில் வங்க மாகாணத்திலே 1861ஆம ஆண்டு, மே மாதம் 7 ஆம் தேதி ரவீந்திரர் தோன்றினர். உலகம் முழுவதும் தம் கவிதை ஒளியால் விளங்கச் செய்த கவியரசரைப் பற்றி எழுதத் துணியும்போது,

"புறத்தே நின்று என்னைப் பார்க்காதீர்கள்; புறக் காட்சிகளில் என்னைத் தேடாதீர்கள்.

"என் துயரத்திலும் என் இன்பத்திலும் என்னை உங்களால் காண முடியாது.

"என் இதயத்தில் குமுறும் சோகப் பெருக்கில் எனனைக் காண இயலாது.

"என் இன்ப வெறியிலும் என்னைத் தேடி நம்பிக்கை இழக்காதீர்கள.

"தேடும் இடங்களில் எல்லாம் கவிஞன் சிக்கமாட்டான்.

"வெறும் வாழ்க்கை வரலாற்றில் நிச்சயம் அவனைக் காண முடியாது"

என்று ரவீந்திரர் ஓரிடத்தில் சொல்லியிருப்பதுதான் நினைவுக்கு வருகிறது.

நாடு முழுவதும் நன்கறிந்த மகரிஷி தேவேந்திரநாத டாகுரின் 14 ஆம் குழந்தையாகப் பிறந்தவர் ரவீந்திரர். அறிவும் கலையும குலவும் மகரிஷியின் குடும்பத்தில் பிறந்த ரவிக்கு இளமையிலேயே பாடல்இயற்றும் பழக்கம் ஏற்பட்டது. செல்லக் குழந்தையான ரவியை அடிக்கடி மகரிஷி இமயமலைப் பிராந்தியத்துக்கு அழைத்துச் சென்று இயற்கையின் வனப்பைப் பருகச் செய்தார். இதனால் ரவியின் உள்ளத்தில் கவிதை ஊற்றுப் பெருகியது; மகரிஷி, ரவியின் அசாதாரண இயல்புகளை அறிந்து தக்கபடி ஊக்கம் அளித்து வந்தார்.

அறிவுமிக்க தந்தையின் அன்புப் பராமரிப்பிலும், கலையில் ரு... உள்ள சகோதர சகோதரிகளி... அரவணைப்பிலும் ரவீந்திரர் இ... மையிலேயே சம்ஸ்கிருதத்தில... வங்காளியிலும் பல நூல்களை படித்து விட்டார்; அவருடை... பேச்சிலும் நடவடிக்கைகளி... ஞானமும் பெருந்தன்மையும்... வீசின.

ரவீந்திரர் தம்முடைய ... வயதில் மேற்படிப்புக்காக இங்... லாந்து சென்றார். லண்டன் சர்வகலாசாலையில் ஆங்கில இலக்கியம் கற்றார். பின்னர் இந்தியா திரும்பியதும் தம்முடைய எஸ்டேட்டுகளைக் கவனிக்கும் பொறுப்பை மேற்கொண்டார். அப்போதும் அவர் இலக்கியப் பணியை மறந்துவிடவில்லை. இந்தச் சமயத்தில் தான் ரவீந்திரர் 'வால்மீகி பிர

திபா' என்னும் இசை நாடகத்தை எழுதினார். அந்த நாடகத்தில் வால்மீகி வேடந்தரித்து தம்முடைய அற்புதமான நடிப்பால் எல்லோரையும் பரவசப்படுத்தினார்.

அவ்வப்போது கங்கைக் கரையோரங்களில் பிரயாணம் செய்த போது உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைக் கவிதைகளாக ரவீந்திரர் வடித்தார். அவை யாவும் 'மாலைக்கீதம்' என்னும் பெயரில் புத்தகமாக வெளி வந்தன. வங்க எழுத்தாளர்களிடையே நன் மதிப்பைப் பெற்ற 'மாலைக் கீதம்' ரவீந்திரருக்குப் புகழேணியாக அமைந்தது.

ஒரு சமயம் ரமேச சந்திர தத்தர் என்னும் அறிஞரின் இல்லத்தில் ஒரு கல்யாண விருந்து நடந்தது. அதற்குப் பிரமுகர்களும் பிரபல எழுத்தாளர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள் ரவீந்திரரையும் அழைத்திருந்தார்கள். விருந்தாளிகளை ரமேச சந்திர தத்தரும் மற்றவர்களும் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். அப்போது பிரபல நாவலாசிரியரான பங்கிம் சந்திரரும், அவர் அருகில் சற்றுப் பின்னால் ரவீந்திரரும் வந்தனர். பங்கிம் சந்திரர் தம் கழுத்தில் அணிய வந்த மலர்மாலையை வாங்கி, ரவீந்திரருக்கு அணிவித்து, "இனிமேல் இவருக்குத்தான் மலர் மாலைகளும் புகழ் மாலைகளும் உரியவை. இவருடைய மாலைக் கீதத்தைப் படித்திருக்கிறீர்களா?" என்றுசொல்லி, ரவீந்திரரைத் தழுவிக்கொண்டார்.

1883 ஆம் ஆண்டில் ரவீந்திரருக்கும் மிருணாளினி தேவிக்கும் திருமணம் நிகழ்ந்தது. அப்போது ரவீந்திரருக்கு வயது இருபத்திரண்டும் மிருணாளினிக்குப் பதினொன்றும்தான் ஆகியிருந்தது.

இந்தியாவின் இலக்கியவானில் ரவி (சூரியன்) போல் திகழ்ந்த கவியரசரின் பத்தினிக்கு மிருணாளினி (தாமரை) என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தமானதே. ரவீந்திரரின் இல்லறவாழ்க்கையில் எல்லா இன்பங்களும் நிறைந்திருந்தன. நகரத்தில் பிறந்து வளராதிருந்தபோதிலும் கவிஞரின் குடும்பத்தில் கிடைத்த பயிற்சி கணவருடைய இலக்கியப் பணிகளிலும் மிருணாளினிக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியது. ரவீந்திரர் எழுதிய 'ராஜாவும் ராணியும்' என்னும் நாடகத்தில் அவர் நாராயணி வேடத்தில் அற்-

---

'கணையாழி'

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ந்ததற்கு ஏற்ற முறையில் செயலாற்றவும் முனைந்துள்ளார் தமிழக முதலமைச்சர். முதல்வர் பக்தவத்சலனார் மேற்கொண்டுள்ள இம் முதல் தரமான முடிவு, கல்வித் துறைவல்லுநர்கள் யாவராலும் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்படும் என்பதில் ஐயமும் உண்டோ?

புதுமாக நடித்திருக்கிறார். ஒரு சமயம் கவிஞர் தம் இல்லத்தில் கவிதை இயற்றும் எண்ணத்தில் லயித்தவண்ணம் உலாவிக்கொண்டிருந்தார். வராந்தாவின் கோடியை அடைந்ததும் அவருடைய உள்ளத்தில் கவிதை பிறந்துவிட்டது. எப்பொழுதும் கவிதையும் அதற்கேற்ற இசையும் இணைந்தே அவர் உள்ளத்தில் தோன்றும். எனவே கவிதை உருப்பெற்றதும், "அமலா (சி. ஆர். தாஸின் சகோதரி) ஓடி வாயேன். என்னுடைய கவனத்திலிருந்து கவிதையும் இசையும் மறைவதற்கு முன் வந்து குறித்துக்கொள்" என்று கூவி அழைத்தார் ரவீந்திரர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மிருணாளினி தேவி, "இவர் இயற்றும் கவிதையின் மெட்டை இவரே மறந்து விடுவாராம்! மிக விந்தையாக இருக்கிறதே!" என்று வேடிக்கையாகச் சொன்னார்.

"மேதையின் இயல்பை இன்னும் நீ உணரவில்லை. அபூர்வ மனிதர்களுடைய செயல்கள் எப்போதும் விசித்திரமாகவே இருக்கும்" என்று ரவீந்திரரும் சிரித்துக்கொண்டே பதில் அளித்தார்.

1902-நவம்பர் 23 ஆம் தேதி மிருணாளினி தம்முடைய இருபத்தொன்பதாவது வயதில் இவ்வுலகை விட்டு மறைந்தார். அவருடைய பிரிவைக் குறித்துப் பின்னால் ரவீந்திரர் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்: "எல்லாவற்றுக்கும் இறுதியில் மரணம் உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவள் பிரிந்து பல்லாண்டுகள் ஆயின. எனினும் எனக்குச் சிக்கல் நேரும் காலங்களில் எல்லாம் அவள் என்னுடனிருந்து நேரான வழி காட்டுவதாகவே உணருகிறேன். என்னுடைய ஒவ்வொரு பிரச்சினையையும் சமாளித்து வெற்றி காண்பதில் அவளுடைய ஆத்மா உதவி வருகிறது."

1901 ஆம் ஆண்டிலிருந்தே தந்தையார் நிறுவிய சாந்திநிகேதனத்திற்குச் சென்று அங்கேயே மனைவியுடனும் குழந்தைகளுடனும் ரவீந்திரர் வசிக்கலானார்.

கல்கத்தாவிலிருந்து வடமேற்கே நூறு மைல் தொலைவில், போல்பூர் ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தூரத்தில் சாந்திநிகேதனம் அமைந்திருக்கிறது. மகரிஷி தேவேந்திரநாத டாகூர் அமைதியான வழிபாட்டுக்குத் தேர்ந்தெடுத்த தலமே சாந்திநிகேதனம். 'அமைதியின் உறைவிடம்' என்னும் பொருளில் சாந்திநிகேதனம் என்று அந்த இடத்துக்குப் பெயரிட்டார் மகரிஷி.

இந்தச் சாந்திநிகேதனத்தில், தம்முடைய நாற்பதாவது வயதில் கவி ரவீந்திரர் தம் லட்சியத்துக்கேற்ப மாதிரிப் பள்ளிக்கூடம் அமைத்தார்.

தம்முடைய இளமையில் இருந்த கட்டுப்பாடுகளுக்கிடையே, வாழ்க்கையோடு இணையாத கல்வியை அவர் பெற்றார். அந்த முறையில் அவருக்கு

மீது அந்த வெறுப்பு ஏற்பட்டிருந்தது. தங்களுடைய குண மேம்பாடுகளையும் விசேஷத் திறமைகளையும் தாங்களாகவே சிறப்பித்து வளர்த்துக்கொள்ளும் வகையில், இயற்கையோடு இயைந்த கல்வி முறையைப் பரப்பும் நோக்கத்துடனேயே அவர் தம் பள்ளியைத் தொடங்கினார். இயற்கையின் கனி நடைத்தில் மாணவ மாணவியர்களின் உள்ளத்தில் கலையும் கவிதையும் பெருகின 1913 ஆம் ஆண்டில் தமது 'கீதாஞ்சலி' என்னும் நூலுக்குக் கிடைத்த நோபல் பரிசுத் தொகை அனைத்தையும் கவியரசர் சாந்திநிகேதனத்தின் வளர்ச்சிக்கே அர்ப்பணித்தார்.

ரவீந்திரர் தம் வாழ் நாளில் ஒவ்வொரு இலக்கியத் துறையிலும் அற்புதப் படைப்புக்களைச் சிருஷ்டித்திருக்கிறார். 'காபுலிவாலா' 'கல்லின் வேட்கை' போன்ற எண்ணற்ற சிறு கதைகளும், 'கோரா', 'குமுதினி', 'புயல்', 'விநோதினி' போன்ற அருமையான நாவல்களும், 'பிராயச்சித்தம்', "முக்ததாரா" முதலிய நாடகங்களும் அவரை இந்திய இலக்கிய மணியாக ஒளி வீசச் செய்திருக்கின்றன. அவர் எழுதிய தத்துவக் கட்டுரைகள் மேனாட்டவருக்கு இந்தியாவின் பெருமையைப் புலப்படுத்தின. மகாத்மாவின் வரிகொடா இயக்கத்தின் கொள்கைகளைச் சற்றுப் பிரதிபலிக்கும் 'பிராயச்சித்தம்' என்னும் அவருடைய நாடகமும், நம் மக்களின் சுதந்திர தாகத்தை எடுத்துக் காட்டும் 'முக்ததாரா' என்னும் நாடகமும் வங்காளிகளின் சுதந்திரக் கனலைத் தூண்டின. 'ஜாலியன்வாலாபாக்' படுகொலையைக் கண்டு குமுறிய ரவீந்திரர் தமக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்திருந்த 'சர்' பட்டத்தையும் துறந்துவிட்டார். அவர் இயற்றிய 'ஜனகணமன' என்ற கவிதையே நமது தேசிய கீதமாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், 1951–ல் விசுவபாரதி சர்வகலாசாலையாக மாறிற்று. ரவீந்திரர் வாழ்நாளில் தங்கிப் பல கவிதைகளை இயற்றிய உத்தராயணம் என்னும் இல்லத்தில் ரவீந்திரர் மியூசியம் அமைந்திருக்கிறது.

கவி ரவீந்திரர், இந்தியாவின் பெருமையை உலகம் முழுவதும் நன்கு அறியச் செய்தவர் அவருடைய பிறந்த தின நூற்றாண்டு விழாவை நம் நாடு மட்டுமல்ல; எல்லா நாடுகளுமே இன்று கொண்டாடுகின்றன.

—" ஆனந்த விகடன் "

54ம் பக்கத் தொடர்ச்சி....

மதிக்கிறவனாய் இருந்தால், அவன் மனம் நோகப் பேசுவானா?

மற்றவர்கள் சந்தோஷமாய் இருப்பதற்குத் தேவையான சூழ்நிலையை உண்டாக்கக்கூடிய சக்தி நம்மிடம் இருக்கிறது. இதை உணர்ந்து, அநேகர் நடந்து கொள்வதில்லை. —'நல்வழி'

நம் நாட்டு மூலிகைகள்

இலவசம்!

1. மூலிகை மணி மாத சஞ்சிகைக்கு ஏற்கெனவே ஓராண்டு சந்தா செலுத்தி சேர்ந்தவர்களுக்கு ஒரு நற்செய்தி! மற்றும் இரண்டாண்டு சந்தா பணம் ரூ. 10 (பத்து) செலுத்தி சந்தா நெம்பரைக் குறிப்பிட்டால் தினமணி சுடரில் வெளிவந்த "நம் நாட்டு மூலிகைகள்" முதல் பாகம் மட்டும் இலவசமாகவே அனுப்பி வைக்கப்படும்.

2. இதுவரை சந்தா சேராத அன்பர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு! மூன்று ஆண்டு சந்தாவை ஒரே தடவையில் செலுத்துபவர்கட்கும் மேல் குறிப்பிட்ட முதல் பாகம் இலவசமாக அனுப்பப்படும். முதல் பதிப்புக்கு விற்பனை ஏஜண்டுகள் கிடையாது. எனவே நேரிடையாக தொடர்பு கொள்பவருக்கு ஒரு புத்தகம் மட்டும் தரப்படும்.

மூலிகை மணிக்கு ஆண்டு சந்தா ரூ. 5—00

தனிப்பிரதி 50–காசு. தபாலில் பெற 60–காசு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விபரங்களுக்கு:

மானேஜர் மூலிகை காரியாலயம்,

33-1, தென்னமரம் தெருவு, P.B. 26.வேலூர். (வ.ஆ.)

குறிப்பு: இதுநாள் வரையிலும் ஆரம்பக் கல்வியில் வெளிவந்து கொண்டிருந்த 'நம் நாட்டு மூலிகைகள்' என்னும் மருத்துவக் கட்டுரை, மேலும் அப்படித் தொடர்ந்து வெளிவராதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். காரணம், மூலிகை மணி ஆசிரியர் அவர்கள், 'நம் நாட்டு மூலிகைகள்' என்னும் தலைப்பில், இதுவரையிலும் வந்த கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் கொண்டு வருவதால்!

—ஆசிரியர்

பௌத்தமும் திருக்குறளும்

கே. பிரம்மசாரி

பௌத்தமும் புத்தர் சம்பந்த முடையது. புத்தர் என்றால் போதியடைந்தவர் எனப் பொருள். போதி அல்லது நிருவாணம் என்ற சொல்லுக்குப் பூரண அறிவும் ஒழுக்கமும் சேர்ந்த மனிதன் இவ்வுலகிலேயே தன் முயற்சியினால் மட்டுமே அடையக்கூடிய மேலான மன நிலை.

புத்தர் அறிவைத் துணைக் கொண்டு எதையும் ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டுமெனப் போதித்தார். உலக வாழ்க்கை துக்கம் நிறைந்தது; துக்கம் நீங்கி இன்பம் பெறவேண்டின் அறநெறி தப்பாது ஒழுக வேண்டும். எவ்வுயிரையும் தன்னுயிர்போல்கருதி அதனிடம் அன்பு காட்டவேண்டும்; துக்கத்திற்குக் காரணம் "அவா" அல்லது பற்று. இப்பற்றுக்கு அறியாமையே முதல் காரணமாக இருக்கிறது. புத்தர் மக்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அறியாமையை நீக்கி உண்மையை யடையுங்கள் ; பற்றை நீக்கி சுகம் பெறுங்கள் என்பது தான்.

நம் கருமத்தின் விளைவிலிருந்து நாம் தப்ப முடியாது. என்றாலும் சுயமுயற்சியினாலும் நற்சிந்தனைகளினாலும் நற்கருமங்களினாலும் வினையையும் மாற்றி விடலாம். இதற்கு தெய்வத்தின் துணை தேவையில்லை. குற்றமற்ற வாழ்க்கை நெறி ஒன்றே போதுமானது. எனது என்னும் புறப் பற்றையும் யான் என்னும் அகப் பற்றையும் நீக்கி வாழ்ந்தால் இவ்வுலகிலேயே பிறவாமையாகிய நிருவாண சுகம் கிட்டும். இதுவே புத்தர் போதனையின் சுருக்கம்.

திருக்குறளின் பாயிரப் பகுதியாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசையேகினன், அறவாழி அந்தணன் என்பனபோன்ற தொடர் மொழிகள் கூறப்பட்டிருக்கின்றன. இச்சொற்றொடர்கள் மயக்கந் தரக் கூடியவையாயினும்இவைகளுக்குத்திருவள்ளுவர் காலத்தில் கூறப்பட்ட பொருள் என்னவென்று ஆராய்ந்தால் இவை புத்த பெருமானையே குறிக்குமென்று சொல்லலாம். கருத்துக்களைச் சொல்லும் முறையிலே புத்தன் என்ற சொல்லுக்கு புத்திமான் — அறிவன் — வாலறிவன் — அதாவது மெய் அறிவுடையவன் என்பது பொருள்.

"பொறிவாயிலைந் தவித்தான்
பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்"

என்ற குறள் நிச்சயமாக உடல் தாங்கிவந்த சாக்கிய முனிவரையே குறிப்பதாகும். பொறியோடு கூடிய உடல் எடுத்து ஐம்புல இச்சைகளை அவித்த நெறி நின்றவர் கௌதம புத்தரைத் தவிர வேறு யார்? எனவே அது அவரையே குறிக்குமென்பது ஒரு தலை. பொய்தீர் ஒழுக்க நெறி என்பது பௌத்த பிடகத்தில் சொல்லப்பட்ட அஷ்டாங்க மார்க்கமன்றி வேறல்ல.

"அறவாழி யந்தணன்றாள்
சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழி நீந்த லரிது"

என்ற குறளில் "அறவாழி அந்தணன்" என்ற சொற்றொடர் தர்மச் சக்கரத்தை உருட்டி உலகத்தை ஒரு நெறிப்படுத்தினவராகிய புத்தருக்குத்தான் பொருந்தும். கௌதம புத்தர் அரச குடும்பத்தில் பிறந்தமை பற்றி அவர் "இறைவன்" என்றும் கூறப்பட்டிருக்கிறார். மேலும் புத்தர் வாழ்ந்த காலத்தில் மக்கள் அவரை ஒரு நடமாடும் தெய்வமாகவே கருதினார்கள். அவருடைய பாத தூளி புனிதத்தன்மை வாய்ந்ததாக மதிக்கப்பட்டது.

கடல் நீர் அளவிட முடியாதது போலவும் கடலில் அலைகள் ஒன்றன்பின் ஒன்று வருவது போலவும் அமையும் பிறவியை தம்மபதம் கூறுவதுபோல் குறளும் "பெருங்கடல்" என்று உவமையாக்கிக் கூறுகிறது. இப்பிறவிக்கு வித்து அவா. அதாவது பற்று என்பது விளங்க...

"துன்பத்துள் துன்பம் அவா..
"அவா என்பவெல்லா
வுயிர்க்கு
மெஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்கிறார் வள்ளுவர். இதே கருத்தை....

"துன்பம் தோற்றம் பற்றே
காரணம்
இன்பம் வீடே பற்றிவி
காரணம்"

என்று பௌத்த காவியமாகிய மணிமேகலை அடிகள் தெளிவாகக் கூறுகின்றன. மேலும்...

ஆரா வியற்கை யவா நீப்பின்
அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

என்பது குறள். "அவா" விட்ட இடத்தே வீடுபேறு உண்டாகுமென்ற பௌத்த தருமத்தின் அடிப்படைக் கொள்கையைத் தெரிவித்துக் காட்டுகிறது. வெறுப்பைக் காண்பதால் துன்பம் உண்டாகுவதுபோல விருப்பைக் காணாததால் துன்பம் உண்டாகும்; எனவே விருப்பு வெறுப்புக்கள் அற்ற நிலையே பிறவாமையாகிய நிருவாணம் என்பது பௌத்தர் துணிபு.

புத்தரால் மட்டும் சிந்திக்கப்பட்டுத் தெளிந்து சொல்லப்பட்ட பிறப்பு இறப்புக்குக் காரணமா

கிய பன்னிரு நிதானம் அல்லது சார்பு இயக்கத்தின் மேன்மையைத் திருவள்ளுவர் இக்குறளில் சுட்டிச் சொல்கிறார்.

"சார்புணர்ந்து சார்பு கெட
ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்"

இப்பன்னிரு சார்புகளின் தன்மைகளை மணிமேகலை ஆசிரியர் பாலி மொழியிலிருந்து தமிழ் ஆக்கம் செய்துள்ளதை இதோ தருகிறோம்.

பேதைமை செய்கை உணர்வே
அருவுரு
வாயில் ஊறே நுகர்வே
வேட்கை
பற்றே பவமே தோற்றம்
வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ
ராறும்
பிறந்தோர் அறியின் பெரும
பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்
நரகறிகுவர்.

(மணிமேகலை 24—ஆம் காதை)

முன் குறிப்பிட்ட குறளில் சொல்லியபடி ஒன்றிலிருந்து ஒன்று காரண காரிய முறையில் தொடர்ந்துவரும் பன்னிரு சார்புகளை அறிந்து அச்சார்புகள் அறும்படி வாழ்ந்தால் பிறவா நிலையாகிய நிருவாணம் என்னும் பெரும் பேறு அடையலாம் என்பது கருத்து. சார்பு கெட ஒழுகுதலாவது பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்றல். அதாவது பௌத்த பாலி பாஷையில் அஷ்டாங்க மார்க்கம் அல்லது எட்டுப்படிகள் கொண்ட பழுதில்லா நன்னெறி. இந்த எட்டுப் படிகள் சீலம் சமாதி பிரக்ஞை அதாவது ஒழுக்கம் தியானம் அறிவு என்ற மூன்றினுள் அடங்கும். இவை மூன்றும் பின்னிப் பிணைந்திருப்பினும் அறிவைச் சரியான முறையில் பயன்படுத்தாமல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் இயலாதல்லவா?

மனத்தை ஒருவழிப்படுத்தல் அதாவது தியானஞ் செய்யப் பழகாமல், மனிதன் வாழ்க்கையின் எத்துறையிலும் வெற்றி பெற முடியாது. எனவே வள்ளுவர் தம் குறளில் அறிவைப் பல அதிகாரங்களில் பலவாறாகச் சிறப்பித்துக் கூறுகிறார்.

"எப்பொருள் யார் யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள், மெய்ப்
பொருள் காண்பதறிவு"

"அறிவுடையார் எல்லாம்
உடையார்
அறிவிலார் என்னுடைய
ரேனு மிலர்"

"குணம் நாடிக் குற்றமு நாடி
யவற்றுள், மிகைநாடி மிக்க
கொளல்"

என்னும் குறட்பாக்களால் பகுத்தறிவுக்கு முதன்மையிடம் கொடுத்ததில் வள்ளுவர் புத்தரைப் பின்பற்றுகிறார்.

ஒருவனது அறிவில் பிறழ்ச்சி ஏற்படின், அவன் முடிவுகளும் தவறாகவே இருக்கும். பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டென்னும் கொள்கையானது அறிவுக்கு

மூறணானதும் மக்கள் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் கேடு விளைவிக்கக் கூடியதுமாகும். இதைத்திருவள்ளுவர் இக்குறளில் கண்டித்துள்ளார்.

"பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்
குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."

மக்களுள் பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லையென்ற பேருண்மையை உலகத்தில் முதன் முதலில் போதித்தவர் புத்தரே!

"பிறப்பினுல் ஒருவன்
தீண்டாதானுமில்லை
பிறப்பினுல் ஒருவன்
பிராமணனுமில்லை
செயலினுலேயே ஒருவன்
தீண்டாதான்
செயலினுலேயே ஒருவன்
பிராமணன்..."

என்ற புத்தரின் திருவாக்கு இங்கு சிந்திக்க வேண்டியதாகும்.

ஆசாரத்தின்பேராலும், சமயத்தின் பேராலும் மக்கள் கைக்கொண்ட சில பழக்க வழக்கங்களும் அறிவுக்குப் பொருத்தமற்றவை என்று காட்டுவனவாக!

"மழித்தலும்நீட்டலும் வேண்டா
உலகம்
பழித்த தொழித்து விடின்"
'அவி சொரிந் தாயிரம்,
வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணமை நன்று"
என்ற குறட்பாக்களைக் கூறலாம்.

அறிவுக்கு அடுத்தபடி, ஒழுக்கம் மேன்மையுடையது என்பதை...

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற அடிகளால் தெரிவிக்கிறார் திருவள்ளுவர்.

அறிவின் துணைக்கொண்டு அறம் நடத்தும் இல்லறத்தான் அதே சமயத்தில் மனத்தை அடக்கியாள முயற்சி செய்ய வேண்டும். பௌத்த தர்மத்தில் தியானம் பழகுதல் இல்லறத்தாருக்கும், துறவறத்தாருக்கும் பொதுவாகவிதிக்கப்பட்டுள்ளது. உலகில் காணப்படும் புத்த உருவங்கள், படங்கள் எல்லாம் புத்தர் தியானத்திலிருப்பதையே காட்டுகின்றன. எனவே, தியானம் அல்லது மன அடக்கம் பௌத்தர்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியவிடம் பெற்றிருக்கிறது. ஏனெனில், உலகில் நிகழும் எல்லா நன்மை தீமைகளுக்கும் மனந்தான் காரணம். எனவே அதை அடக்கவேண்டும். வினைப் பயன் வினை செய்தவனை நிழல் போல தொடர்ந்து வரும். ஆகவே, மனத்தைத் தூய்மைப் படுத்த வேண்டுமென்பதை, அதாவது நன்மையை விருத்தி செய்ய வேண்டுமென்பதை...

"மனத்துக்கண் மாசிலனாத
லனைத்தறன், ஆகுல நீரபிற"

என்ற குறள் தெரிவிக்கின்றது. மனவடக்கம் பெற்றவன் தானம், தவம் செய்வோனைக் காட்டிலும் மேலானவன் என்று தம்மபதத்தில் புத்தர் கூறிய கருத்தை,

"மனத்தொடு வாய்மை
மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை"

என்ற குறள் கூறுகிறது. நம்மை நாமே விருத்தி செய்துகொள்ளும் முயற்சியில் தலைவிதி தலையிடுதலை ஒதுக்கித் தள்ளவேண்டும் என்ற புத்தர் கருத்தை,

"தெய்வத்தால் ஆகா தெனினும்
முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று வள்ளுவர் கூறுகிறார்.

"ஊழையு முப்பக்கங் காண்ப
ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்ற குறள், "நீங்களே, உங்களுக்கு ஒளி, நீங்களே உங்களுக்கு எஜமானன், நீங்களே உங்களுக்கு அரண்"...என்ற புத்தர் வசனத்தை ஞாபகமூட்டுகிறது.

"எனைத்தானு மெஞ்ஞான்றும்
யார்க்கு மனத்தானா
மாணா செய்யாமை தலை"

என்ற குறள் கருணையே உருவாகி வந்த புத்தபிரான் உபதேசித்த அறத்தையே கூறுவதாகும்.

வீட்டுக்குக் காரணமான நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல்,...இவை அடிப்படையான பௌத்த கருத்துக்களுக்குப் பொருத்தமுடையனவாக உள்ளன. யாக்கை, இளமை, செல்வம் முதலியன நிலையா என்ற நிச்சயம் ஏற்பட்டால், துறவு மனப்பான்மை தானே உண்டாகும். இதிலிருந்து மெய்யுணர்வு நிலைத்தவிடத்து அவா வறுத்தலும் ஏற்படும்.

"அவாவில்லார்க் கில்லாகுந்
துன்பம ஃதுண் டேற்
றவா அது மேன்மேல் வரும்"

இதனால், "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்ற வள்ளுவர் கருத்தும், புத்தர் சொன்ன நிருவாணமும் ஒன்றே என்று நிச்சயிக்கலாம்.

உலகப் பொதுமறையாகிய திருக்குறளும், உலகப் பொதுச் சமயமாகிய பௌத்தமும், ஒரே குறிக்கோளை யுடையனவென்று கூறலாம். அக்குறிக்கோள், உலகமெல்லாம் ஒன்று, உலக மக்கள் எல்லாம் சகோதரர்கள் என்ற நோக்குடன், தனக்கென வாழாது, பிறர்க்கென வாழும் உத்தம புருஷர்களை உருவாக்குவதே. இவ்வுலகில் அன்பும் அருளும் கலந்த பரிபூரண வாழ்க்கை நடத்துவதே பௌத்தத்தின் நோக்கம். திருக்குறளின் நோக்கமும் இதுவேதான்.

(திருச்சி அ. இ. ரே. நிலயத்தில் ஒலிபரப்பானது.)

அகத்தியம் என்றால் முக்கியம், முதன்மை என்பதாகும். அப்படிப்பட்ட ஓர் அரிய மூலிகையைப் பற்றிய விளக்கம் இது :

அகத்தியர் மூலிகை

வேலூர் டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பன்

அகத்தியம் என்றால் முக்கியம், முதன்மை என்பதாகும். மிகவும் வேண்டிய ஒருவரை அன்புடன், அழைக்க "நீங்க அகத்தியமா, வாங்க, மறந்துடாதீங்க" என்றும் சிலர் சொல்வது உண்டல்லவா? அகத்தியர் என்றாலும் முக்கியமானவர். முதன்மையானவர். சிவபெருமானால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டவர். முருகனுக்குச் சீடர். தமிழ் மருத்துவத்தையும் தமிழ் மொழியையும் பொதிகையின் கண் இருந்து வளர்த்தவர். இவர் பெயர் கொண்ட மூலிகையும் நம் நாட்டில் உண்டு. நாம் சாதாரணமாக உணவுடன் சேர்த்து உட்கொள்ளும் அகத்திக் கீரையைத்தான் "அகத்தியர் மூலிகை" என்பது. சமஸ்கிருத மொழியில் அகத்தியா என்றே ஆயுர்வேத வைத்தியர்கள் சொல்லுவார்கள்.

அகத்தியும் அறுகம் புல்லும் மிக நெருங்கிய நண்பர்களுக்குச் சமம். அகத்தி, செடி இனத்தைச் சேர்ந்தது. ஆயினும் மிக உயரமாக இரண்டு முதல் ஐந்து ஆள் உயரத்திற்கு வளரக்கூடியதே. இதில் சிற்றகத்தி, பேரகத்தி, சீமை அகத்தி, சிவப்பகத்தி என்பன போன்று பலவிதம் இருந்த போதிலும், இங்கு நாம் வழக்கமாக உட்கொள்ளும் வெள்ளை நிறப் பூக் கொண்ட அகத்தியைத்தான் குறிப்பிடுவது வழக்கம். அகத்தியை இந்தியா முழுவதும் பயிரிட்டு வளர்க்கிறார்கள். ஆயினும் குறிப்பாகத் தென்னாட்டில் கால் நடைத் தீவனமாகவும், உணவுடன் உட்கொள்ளவும், ஏராளமாகப் பயிரிட்டு வருகிறார்கள். வெற்றிலைத் தோட்டம் போடுபவர்களுக்கு அகத்திப் பயிர் ஓர் இன்றியமையாத சாதனம். தோட்டம் அமைக்கும் செலவை மிச்சம் செய்வதுடன், தோட்டத் தொழிலாளர்களுக்குத் தினசரி ஏற்படும் செலவை சரிக்கட்டி வருகிறது.

மருத்துவப் பயனும் குணமும்

அகத்தியிலை, பூ, பட்டை, வேர் யாவும் மருத்துவப் பயன் உடையவை ஆயினும்நமது வழக்கத்தில் இலை ஒன்றுதான் உணவு மருத்துவமாகப் பயன்பட்டு வருகிறது. அகத்தியிலை பொதுவாகச் சிறு கைப்பு ருசியை உடையது. உடலில் உண்டாகும் விஷ நீர்களை முறித்து வெளியேற்றும். குடலில் தேங்கும விஷ பூரிதமான மலங்கள், கிணை நீர், ஆகிய அசுத்தங்களைச் சுத்தி செய்யும். மலச்சிக்கலை நீக்கி மலத்தை உடைத்து வெளித்தள்ளும். பித்

தத்தால் வந்த வெப்ப நோய்களையும் உடல் சூட்டையும் தணித்து விடும். மேலும் இது அறுகம்புல் போல அதைவிட கடுமையான வேகத்தில் மருந்துகளின் செய்கைகளை முறித்துவிடும்.

இதைப் பருப்புடன் சேர்த்து மிளகு நீர் (ரசம்) குழம்பு, பொரியல் ஆகச் செய்து சாப்பிட மேல் குறிப்பிட்டவைகள் விலகும். ஆனால் நாள் தவறாமல் சாப்பிட்டாலோ, அடிக்கடி பயன்படுத்துவதாலோ நன்மை தருவதற்குப் பதில் தீமையே விளையும். உடலில் உள்ள நல்ல ரத்தத்தை எல்லாம் முறித்து வாயுவைப் பெருக்கி பல நோய்களை உண்டாக்கும். ஆத

" அகத்தியர் "

லால் அகத்தியை பட்சத்திற்கு ஒருமுறை மட்டும் சாப்பிடுவது நல்லது. நம் நாட்டில் இதை திதி கொடுப்பது வழக்கம். அதாவது நீத்தார் கடன், நினைவு நாள் வழிபாடுகளில் புரோகிதர்களாக வரும் ஓதுவார் பிரதியுபகாரமாக, பருப்பு, அரிசி, பூசணி, பழம் தாம்பூலத்தோடு அகத்தியையும் சேர்த்து தானமாகக் கொடுப்பதாகும்.

மருந்துண்ணும் காலங்களில், அகத்தியை உண்ணக்கூடாது. நாட்டு மருத்துவ முறையில் உண்ணும் அன்பர்கள், "மருத்துவரே பத்தியம் என்ன" என்று கேட்டால், மருத்துவர் எடுத்த எடுப்பிலேயே "அகத்திக்கீரை, கொள்ளு, பூசணிக்காய், சிறுகீரை, புகையிலை, கடுகு, கடலை எண்ணெய், காபி, டீ" என்று முடிப்பார். மருந்துகளின் செய்கைகளை முறித்துவிடுவதில் அகத்தி முதன்மையானது. நம் நாட்டில் ஒரு தீய பழக்கம் இருந்து வருகிறது. அதாவது ஆசாபாசங்கள் மாறாமல் இருக்கவேண்டியோ அல்லது தன் சொற்படி ஆட்டிப்படைக்க வேண்டும் எனக் கருதியோ, ஒருவருக்கொருவர் உண்ணும் உணவில் இடு மருந்துகளைக் கலந்து வைத்து விடுகின்றனர். நாள் செல்லச் செல்ல இம்மருந்துகளின் கெட்ட செய்கையால் நோயாளியாகி மீளாத நரகம் எய்துவார்கள். இத்தகைய கொடிய பாதகமான செய்கை வேறெதுவும் இருக்க முடியாது என்றே துணிந்து கூறலாம். இந்த இடு மருந்துகளின் வேகம் தணியவும், வயிற்றை விட்டுக் கழியவும் இந்த அகத்தி மிகவும் பயனுள்ளதாகும். இடு மருந்து உண்டவர் என்று திட்டமாகத் தெரிந்த பின் நாள் தோறும் காலையில் வெறும் வயிற்றில் ஒரு பிடி அகத்திக்கீரையை நன்றாக மென்று தின்னச் செய்தல் வேண்டும். சரிவர மென்று தின்னவில்லையானால், பயன் தராது. இப்படி, வாரம் விட்டு வாரம் மாற்றி மாற்றிச் செய்தல் வேண்டும். உணவிலும் வாரம் ஒருமுறை சாப்பிட்டுவருவது நல்லது. அத்துடன் அகத்திக் கீரையை இடித்துப் பிழிந்த சாற்றைத் தலையில் தேய்த்து ஒருமணி கழித்தபின் தலைமுழுகிவர இடு

மருந்து வேகத்தால் உண்டாகும் மனக்கலக்கம், சித்தப்பிரமை, குழப்ப நிலை, பயம், பயித்தியம், ஆகியவைகள் குணமாகிவிடும்.

அகம், தி, இலை—உடம்பின் உள்ளேயும் மனதிலேயும் மூண்ட தீக்கனை (உஷ்ணத்தைத் தணிக்கக் கூடியது) மலச்சிக்கல் உள்ளவர்கள், வெய்யிலில் சுற்றி அலைபவர்கள், காபி, தேயிலை பானங்கள் பருகி பித்தம் அதிகப்பட்ட அன்பர்கள் மட்டும் வாரம் 1 முறை உணவுடன் கொள்ள மிக்க பயன் தரும். மற்றவர்கள் மாதம் இரு முறை அகத்தியமாக அகத்திக் கீரையை உண்டுவரலாம்!

அகத்தியிலை மிகுந்த வீரியமும் சக்தியுமுடையது. ஆகையால் உபவாசம் விரதம் இருந்து முடிப்போர் முதல் உணவுடன் அகத்தியையும் சேர்ப்பார்கள். அகத்தியில் 63 வித சக்திகள் அடங்கியுள்ளதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன. குறிப்பாக நம் நாட்டில் வைகுந்த ஏகாதசி விரதம் இருப்பவர்கள் உண்ணு நோன்பு இருப்பதுடன் கண் விழித்தும் இருக்க வேண்டும். இங்ஙனம் இருந்த பின் உடலில் இருந்து கழிந்த சக்தியைச் சரிக்கட்ட விரதம் முடிக்கும்போது, உண்ணும் உணவின் முதல் ஒரு கைப்பிடி அளவில் நூறுவித சக்திகள் அடங்கி இருத்தல் அவசியமாம். இது எப்படி முடியும். ஒரு கைப்பிடி உணவில் நூறு வித சக்திகள் அடங்கவேண்டுமானால், கீழ்கண்ட பதார்த்தங்களை ஏகாதசி விரதம் அன்று அகத்தியமாகச் சேர்ப்பார்கள். (1) அகத்திக்கீரை 63 (2) சுண்டைக்காய் 30, (3) வாழைக்காய் 3. (4) கொத்தவரை 1, (5) அரிசிச் சோறு 1, (6) பருப்பு 1, (7) நெய் 1. ஆக இந்த ஏழு பொருள்களில் 100 வித சக்திகள் அடங்கிவிட்டதே! இவை யாவும் ஒரு சேர பிசைந்து ஒரு பிடி முதல் உணவாக உண்டு விரதம் முடிப்பவர்கள், இந்த விஞ்ஞான சகாப்தத்திலும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அகத்தி இலை ரசத்தால் மான் கொம்பு சுத்தி செய்து பஸ்பம் செய்வதும் அகத்திப் பூவின் ரசத்தால் அப்பிரகத்தை சுத்தி செய்து செந்தூரமாக்குவதும், சித்த மருத்துவத்தின் அம்சம்.

அகத்தியிலையைப் போலவே, பூவிற்கும் குணம் ஒன்றே. ஆயினும் இதன் வெண்ணிறமான பூவின் ரசம் புகைப் பழக்கத்தால் உண்டான சளி, கபம், பித்த ரோகங்களைப் போக்கவல்லது. இந்த நோய்களில் துன்பம் அடைபவர்கள் கீரையைச் சமைப்பது போல வாரம் இரண்டொரு நாள் பூவையும் பருப்பு சேர்த்து உணவில் கொள்ளக் குணமாகும். ஆனால். புகைப் பழக்கத்தை நிறுத்திவைப்பது அவசியம்.

மரப்பட்டையையும் வேர்பட்டையையும் கஷாயமிட்டுக் குடித்துவரலாம். இதனால் பித்த சுரம். விடாத விஷ சுரம், தாகம், கை, கால் எரிப்பு, மார்பு எரிச்சல், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல, சிறுநீர்க்கடுப்பு, மூத்திர

தாரை, எரிவு, தொத்து நோய்கள், அம்மை சுரம் ஆகியவைகளில் இந்தக் குடிநீர் கஷாயம் கொடுத்துவர நீங்கும்.

அகத்திக் கீரையைத் தானம் கொடுப்பது மிகவும் சிறப்புடைய செயலாகும். அதிலும் பசுக்களுக்குக் கொடுப்பதில் பூர்வகர்ம வினைகள் யாவும் விலகும். மனிதப் பிறவியாய்ப் பிறந்த நமக்கு நாள்தோறும் தவறுமல் செய்ய வேண்டிய கடமைகளில் இதுவும் ஒன்று. ஏழை, செல்வந்தர்கள். எல்லோர்க்கும் எளிது. இதனை,

"யாவர்க்கும் ஆம் இறைவர்க்கு
ஒரு பச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவிற்கு ஒரு
வாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும்போது
ஒரு கைப் பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்
னுரை தானே"

என்ற திருமூலர் பாடலால் அறியலாகும். அகத்தியர் காலத்திற்கு முற்பட்டவர் திருமூலர் என்னும் சித்தர். தமிழ் மருத்துவமும், தமிழ் மொழியை வளர்த்தவருமான அகத்திய முனிவருடைய பெயரைத்தாங்கிய அகத்தி, முக்கியமானதும் ஆபத்துக் காலங்களில் முதன்மையானதுமாகி மனித சமுதாயத்திற்கு நற்பணி செய்துவருவது போற்றக்கூடிய விஷயமே!

—தினமணி

" ஆரம்பக்கல்வி " ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00
தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

நம் உடலின் மதிப்பு ரூ. 25 தான்!

ச. இராமலிங்கம், எம். ஏ.

அறிவியலில் மேல்நாடுகள் அடைந்திருக்கும் வளர்ச்சியைக் காணும்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது!—ஏன், விந்தையாகவும் இருக்கிறது. காரணம், நாம் இன்னும் அறிவியலில் அதிகப் பற்றுக் கொள்ளாமல், ஆத்மீகத்துக்கு அதிக நேரம் செலவழிப்பதுதான். இன்றைக்கு நாம் அறிவியலில் தத்தி நடக்கும் சிறுபிள்ளை அளவுதான் வளர்ந்திருக்கிறோம்.

அண்மையில் நம் நாட்டில் ஒரு காட்சியை விந்தையெனக் கண்டு களிப்புற்றோம். தேவர்கள்தான் உலவமுடியும் என்ற வானவீதியிலே உலவி வந்த ருஷிய ஆரணங்கு நம் நாட்டின் வீதியில் உலவியபோது நமக்கு விந்தையாகவே இருந்தது! ஏன்? இன்னும் ஒரு சிலர் அந்த நாரீமணி தேவ அவதாரமோ என நினைத்திருப்பார்கள் என்று கூட நினைக்கத்தான் தோன்றுகிறது.

இப்படி விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே இருக்கும் இடைவெளியை அறிவியலால் குறைக்க பல அரிய சாதனைகளைப் புரியும் இந்த மானிட உடலைப்பற்றி நம் நாட்டு ஆத்மீகர்களைக் கேட்டால் "காற்றடைத்த பை" யென்றும் "குயவன் செய்த பாண்டம்" என்றும் சொல்லத் தயங்குவதில்லை. ஆனால் அறிவியலில் ஆழ்ந்த பற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையும் வைத்திருக்கும் விலங்கியல் வல்லுநர்கள் மானிட உடலே ஒரு விந்தையான பொருள் என நினைக்கின்றனர்.

மாமிசப் பிண்டம் என்று மாமுனிவர்கள் கூறும் நம் உடலில் உள்ள அமைப்புகளைப் பற்றியும் அவை இயங்கும் தன்மையைப் பற்றியும் தெரிந்து கொண்டால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். "ஏதோ பிறந்தோம் — வளர்ந்தோம்; நம் வேலையை நாம் செய்து விட்டுப் பிறகு சாக்காடுவரும் போது ஏற்போம்" என வரட்டு வேதாந்தம் பேசி அறியாமை என்னும் இருளிலே இருத்தல் கூடாது. இந்த அணுயுகத்தில் தன்னைத்தான் தெரிந்து கொள்ளாதவன் மனிதனே ஆகான்.

இன்று சிந்தித்ததை யெல்லாம் செயலாற்றும் வன்மை படைத்த இந்த மானிட உடல் முதன் முதலில் தாயின் கருவில் உருவாகும் போது ஒரு அரிசியில் ஐம்பதில் ஒரு பங்காக—ஓர் உயிர் அணுவாக இருந்தது. அந்த ஒருயிர் அணுதான் வளர்ந்து பெருகிப் பெருகி பல்லுயிர் அணுக்

கள் கொண்ட உருவாக மாறிக் குழந்தையாகப் பிறக்கிறது.

இப்படிக் கருவிலே உருவாகி, குழந்தையாகி உலகில் வந்துதித்த மழலைச்செல்வம் நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து பருவக் கன்னியாக வோ அல்லது கட்டிளங்காளை யாகவோ மாறுகிறது. இப்படிப் பருவத்திற்கு ஏற்றாற்போல் உட லில் வளர்ச்சியும் சில மாற்றங் களும் தோன்றுகின்றன. குழந் தையாகப் பிறக்கும்போது சுமார் 18 அங்குலம் உயரமும் $7\frac{1}{2}$ பவுண்டு எடையுமுள்ள உருவம் நன்றாக வளர்ந்த பிறகு சுமார் $5\frac{1}{2}$ அடி உயரமும் 160 பவுண்டு எடையு முள்ள உருவமாக மாறுகிறது! இப்படி வளரும்போது ஒவ்வொரு பாகமும் ஒரு குறிப்பிட்டமடங்கு தான் வளருகிறது.

சாதாரணமாக ஒரு மனித னின் தலை குழந்தையின் தலை யைப் போல் இரண்டு மடங்கும், உடம்பு குழந்தையின் உடம் பைப் போல் மூன்று மடங்கும். கைகள் குழந்தையின் கைகளைப் போல் நான்கு மடங்கும், கால் கள் குழந்தையின் கால்களைப் போல் ஐந்து மடங்கும் வளர் கின்றன. இப்படி வளர்ந்து விட்ட ஒரு மனிதனின் உயரத்தைக் கணக்கிட பண்டைய காலத்து மக்கள் பல முறைகளைக் கை யாண்டதாகத் தெரிய வருகிறது.

எகிப்தியர்கள் "ஒருவனு டைய உருவம் அவன் கையி லுள்ள நடுவிரலின் நீளத்தைப் போல் பத்தொன்பது மடங்கு உள்ளது" எனக் கண்டறிந்த னர். ஒரு மனிதனின் உயரம் அவன் தலையைப்போல் ஏழரை மடங்கு நீளமுடையது என்றும் கணக்கிட்டு வந்ததாகத் தெரியவரு கிறது.

இவ்வாறு வளர்ந்துவிட்ட ஒவ் வொரு மனிதனின் உடலிலும் உள்ள இரத்தக் குழாய்களில் சுமார் ஒன்பதரை பிண்ட் இரத் தம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஒன்பதரை பிண்ட் இரத்தத் தில் சுமார் இருபத்தைந்து பிலியன் இரத்த அணுக்கள் இருக்கின்றன. இந்த அணுக்கள் யாவையும் ஒரு சீராக ஒரு வரிசையில் அடுக்கினால் உல கினைச் சுற்றி நான்கு முறை வலம் வரலாம்.

இந்த இரத்தத்தை இரத்தக் குழாய்களில் சுற்றிக்கொண்டே இருக்கும்படி செய்வதற்குத்தான் இருதயம் சுருங்கி விரிந்துகொண் டிருக்கிறது. இந்த இருதயம் சுமார் ஒரு லட்சம் தடவை ஒவ் வொரு நாளும் சுருங்கி விரிகிறது. இப்படி ஓய்வின்றிச் சுருங்கி விரி யும்போது ஒவ்வொரு நாளும் 2500 காலன் இரத்தத்தைப் 'பம்ப்' செய்கிறது. நம் இரத் தத்திலுள்ள ஒவ்வொரு அணு வும் இருதயத்திலிருந்து பல பாகங்களுக்கும் மறுபடியும் இரு தயத்திற்குமாக, தினம் 3000 தடவைகள் சுற்றுலாச் செய்கின் றன.

இப்படி இருதயத்தைச் சுருங்கி விரியச் செய்யத் தசைகள் பெரிதும் உதவுகின்றன. இருதயத்தில் உள்ள தசைகள் இயங்காத் தசைகளாகும். அவைகளை நம்மிடத்திற்கு ஏற்றாற்போல் இயக்கமுடியாது. நம் உடலில் மொத்தமாக 639 தசைகள் இருக்கின்றன. சில தசைகள்; இயங்கு தசைகள். அவைகளை நம்மிடத்திற்கு ஏற்றாற்போல் இயக்குவிக்க முடியும்.

ஒரு மனிதன் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் காரணமாக இருப்பது அவன் தலையிலுள்ள மூளையே ஆகும். இது சுமார் $3\frac{1}{2}$ பவுண்டு எடை இருந்தாலும், 1500 மிலியன் உணர்வு அணுக்கள் கொண்டதாக இருக்கின்றது. இந்த மூளை, பெருமூளை, சிறுமூளை, முகுளம் என மூன்று பாகமாகப் பிரிக்கப்படுகிறது. "அறிவின்உறைவிடம் பெருமூளையே." சிறுமூளை உடலிலுள்ள இயங்கு தசைகள் யாவும் சீராகவும், கிரமமாகவும் இயக்குகிறது. முகுளம்தான் இயங்காத் தசைகளின் அசைவுகளைக் கட்டுப்படுத்துகிறது. ஆகவேதான் மனிதன், மூளையில் முகுளம் பழுதடைந்த அந்த நிமிடமே இறந்து விடுகிறான். நம்முடைய மூளையானது தற்கால அறிவியலின் முயற்சியால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் எலெக்ட்ரானிக் காம்புட்டடரைவிட 1000 மடங்கு அதிக ஞாபகம் உடையது.

ஒரு மனிதனின் உடம்பில், தினம் அவன் செய்யும் வேலைகளினால் சுமார் 2500 காலரி உஷ்ணம் உண்டாகிறது. அந்த உஷ்ணத்தைக் கொண்டு 25 குவார்ட்ஸ் தண்ணீரைக் கொதிக்க வைக்கலாம். இப்படி உஷ்ணம் உண்டாவதற்குக் காரணம் நம்முடைய உடலிலுள்ள சில செல்கள் நாம் சுவாசிக்கும்போது உட்கொள்ளும்பிராணவாயுவுடன் கலந்து எரிவதே ஆகும். இப்படி எரியும்போது ஏற்படும் சக்தியைக் கொண்டுதான் நாம் வேலை செய்கிறோம்! எரிந்த பிறகு, கரியமிலவாயு வெளியேற்றப்படுகிறது. ஒரு மனிதன் ஒரு வருடம் சுவாசிக்கும்போது வெளியிடும் கரியமில வாயுவில் இருக்கும் கரிப்பொருள் 100° கரிக்கட்டிகள் செய்யக்கூடிய அளவு இருக்கும்.

மற்றும் அன்றாடம் செய்யும் கிரியைகளினால் மனிதன் உடலிலிருந்து தினம் தினம் கழிவுடைப் பொருள்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. அவையே சிறுநீரும் வியர்வையும். இரத்தத்திலுள்ள சிறு நீரைப் பிரித்தெடுக்க நம் உடம்பில் இரண்டு சிறுநீரகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் சிறுநீர் வடிக்கும் நுண்குழாய்கள் சுமார் ஒரு மிலியன் இருக்கின்றன. ஒவ்வொன்றும் சுமார் இரண்டு அங்குல நீளம் உள்ளது. அவைகளை ஒரு சீராக நேராக அடுக்கினால் சுமார் 33 மைல் தூரம் இருக்கும்.

வியர்வையை வெளிப்படுத்தவும் உடலை மூடவும் அமைந்திருப்பது தோலாகும். இந்தத் தோலில்தான் வியர்வையை வெளிப்படுத்தும் சுரப்பிகள் இருக்கின்றன. சாதாரணமாக உடலை மூடியிருக்கும் தோல் எல்லாப் பாகங்களிலும் வியர்க்கும். ஆனால் ஓரே ஒரு பாகம்தான் நம் உடலில் வியர்ப்பதில்லை. எது தெரியுமா? அதுதான் உதடுகள்! வியர்க்காத காரணத்தினால்தான் உவர்க்காத அந்தப் பாகத்தைச் சுவைக்கிறோம்—தேனொழுகும் கனியிதழ்கள் என்கிறோம். நம்முடைய ஒவ்வொரு சதுர சென்டிமீட்டர் தோலிலும் குளிரை உணர்த்தும் இரண்டு சாதனங்களும், சூட்டை உணர்த்தும் 12 சாதனங்களும், முப்பதினாயிரம் செல்களும், சுமார் 10 மயிர்களும், 15 எண்ணெய் சுரப்பிகளும், ஒரு கஜ நீளமுள்ள இரத்தக் குழாய்களும், 100 வியர்வைச் சுரப்பிகளும், 3000 உணர்வுச் செல்களும், 4 கஜம் நரம்புகளும் இருக்கின்றன. நம் முழு உடலை மூடியிருக்கும் தோலைக் கொண்டு சுமார் 25 அல்லது 30 ச. அடி இடத்தை மூடலாம்.

நம் விரல்களில் இருக்கும் நகங்களும் உடல் மேல் இருக்கும் மயிர்களும் தோலிலிருந்து தான் உண்டானவை. ஒரு மனிதனின் தலையில் சுமார் ஒரு லட்சம்மயிர்கள் இருக்கின்றன. நன்றாக வளர்ந்த ஒரு பெண்ணின் முடி 3000 பவுண்டு எடையைத் தாங்கக் கூடிய சக்தியுடையது.

நம் உடம்பிலுள்ள ஐம்புலன்களில் மிகவும் முக்கியமான உறுப்பு கண். இந்தக் கண்ணைக் காக்க இமைகள் இருக்கின்றன. அதோடன்றி கண்ணை மூடியிருக்கும் கண்ணாடி போன்ற சவ்வினை எப்போதும் ஈரமாக வைத்துக் கொள்ள கண்களின் உட்புற ஓரத்தில் கண்ணீர் சுரப்பிகள் இருக்கின்றன. இவைகளை எடுத்துவிட்டால் கண்ணாடி போன்ற சவ்வு காய்ந்துவிடும். அந்தச் சவ்வு காய்ந்துவிட்டால் பார்வை இழக்க நேரிடும்.

வேல் விழிக்கு வில்போன்ற புருவம் இருப்பது அழகுக்கு அழகு செய்வதற்கு அல்ல. நெற்றியிலிருந்து வழிந்துவரும் நீர் கண்களில் விழாமல் தடுத்து பக்கத்தில் விழச் செய்வதற்குத் தான் அமைந்திருக்கின்றன. கண்ணீர் சுரப்பியிலிருந்து சுரக்கும் கண்ணீர் கண்டோர் மனதை இளகச் செய்வதற்காக மாத்திரமல்ல. கண்ணீர் சில நுண்ணணுக்களையும் கொல்லக்கூடிய சக்தியுடையதாகும்.

கண் சாதாரணமாக ஐந்து லட்சம் வண்ணங்களைப் பிரித்து உணரக்கூடிய தன்மையுடையது. பகலில் நாம் ஒரு காட்சியைக் காணும்போது மையமாக இருக்கும் பொருள்கள் மிகக் கூர்மையாகவும், சுற்றுப் புறத்தில் இருக்கும் பொருள்கள் மங்கலாகவும் தெரியும். ஆனால் இரவிலோ சுற்றுப்புறத்தில் இருக்கும் பொருள்கள் காட்சியின் மையத்தில்

இருக்கும் பொருளைவிட நன்றாகத் தெரியும். நாம் ஏறக்குறைய ஒரு நிமிடத்திற்கு ஆறு தடவை கண் இமைக்கிறோம். ஒவ்வொரு கண் இமைப்புக்கும் $\frac{1}{4}$° செகண்ட் ஆகிறது.

பகலில்தான் வண்ணங்களைச் சரியாகக் கண்டறியக் கூடிய திறம் படைத்திருக்கின்றன நம் கண்கள். இரவில் வண்ணங்கள் அவ்வளவு நன்றாகத் தெரியா. ஆனால் பகலிலேயே சிலரால் வண்ணங்களைச் சரியாகக் கண்டறிய முடிவதில்லை. உலகிலுள்ள மக்களில் ஆண்களில் 8 சதவிகிதமும் பெண்களில் அரை சதவிகிதமும் வண்ணக் குருடர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்குப் பார்வை நன்றாக இருப்பினும் வண்ணங்கள் மாறாகத் தோன்றும். உதாரணமாக சிலருக்குச் சிவப்பு வண்ணம் நீல வண்ணமாகத் தோன்றும். பிறந்த கைக் குழந்தை ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்கும். சிறிது வளர்ந்து பிள்ளைப்பருவம் வந்ததும் 10மணி நேரம் தூங்கும். ஆனால் பருவம் அடைந்த ஒரு மனிதன் 7 மணி நேரம் தூங்கினால் போதும். அப்படித் தூங்கும் போதுதான் மனிதன் கனவுகளைக் காண்கிறான். அந்தக் கனவுகள் காணும் போதும் கண்கள் அசைந்து கொண்டுதான் இருக்கின்றன.

நாக்கும் ஐம்புலன்களில் ஒரு சிறந்த உறுப்பாகும். நாக்கு இல்லை என்றால் நம்மால் பேச முடியாது. அதுமாத்திர மன்று; அறுசுவை உண்டியின் சுவையை உணர நாக்கினால் முடியும். உவர்ப்பு,புளிப்பு, கசப்பு, இனிப்பு ஆகிய நான்கு சுவைகளை உணரும் நம் நாக்கின் நடுவில்தான் 'அமைதி வெளி'' இருக்கின்றது. அந்த இடத்தில் எந்த ருசியையும் அறிய இயலாது. வாயின் இரண்டு தாடைகளிலும் பற்கள் அமைந்திருக்கின்றன. உடலிலேயே மிகவும் கடினமான பொருள் பல்தான். முத்துப் போல் இருப்பதற்குக் காரணம் அதன் வெளிப்புறத்தே சுண்ணும்பு போன்ற பொருள் இருப்பதே. ஒரு மனிதன் சுமார் இருபது வயது அடைந்ததும் அவனுக்குக் கடைசியாக நான்கு கடைவாய்ப் பற்கள் தோன்றுகின்றன. அவைகளுக்கு ஞானப்பற்கள் என்று பெயர். அவைகள் தோன்றுவதால் மனிதனுக்கு ஞானம் தோன்றுவதில்லை. ஆனால் அது தோன்றும் நேரத்திற்குள் அவன் அறிவின் முதிர்ச்சி அடைந்திருக்க வேண்டுமென்பதே இதன் உட்கருத்தாகும்.

மனித உடலில் கொழுப்பும் ஒரு முக்கியமான பொருளாகும். இது ஒரு குறிப்பிட்ட அளவு மனிதனின் உடலில்இருக்கவேண்டும். காளைப் பருவம் பெற்ற ஒரு ஆணின் உடலில் சுமார் 13 பவுண்டு கொழுப்பும் கன்னிப் பருவம் எய்திய ஒரு பெண்ணின் உடலில் சுமார் 39 பவுண்டு கொழுப்பும் இருக்கின்றது. ஆகவேதான் பெண்கள் குளிரைத் தாங்கக்கூடிய சக்தியை ஆண்களைவிட அதிகமாகப் பெற்றிருக்கின்றனர். அதோடன்றி

பெண்கள்தான் அதிக வல்லமை உடையவர்கள். காரணம் அவர்களின் உடம்பு நோயினை எதிர்த்துப் போராடக்கூடிய சக்தி அதிகமாக உடையதே ஆகும்.

இன்று வானவெளிக்குப் பறந்து செல்லும் அரிய செயல்களைச் செய்யும் ஒரு மனிதனின் உடலில் ஏழு சோப்புக்கட்டிகள் செய்வதற்கேற்ற கொழுப்பும், 9000 பென்சில்கள் செய்வதற்கேற்ற கரியும், 2200 தீக்குச்சிகள் செய்வதற்கேற்ற பாஸ்பரசும், ஒரு சாதாரண ஆணி செய்வதற்கு வேண்டிய இரும்பும், 10 காலன் தொட்டியை நிரப்புவதற்கு வேண்டிய தண்ணீரும், ஒரு நாயின் உடலில் உள்ள உண்ணிகளைப் போக்குவதற்கு வேண்டிய கந்தகமும், ஒரு சிறிய கோழிக் கூண்டிற்கு வெள்ளையடிக்க வேண்டிய அளவு சுண்ணாம்பும் இருக்கின்றன.

இவ்வாறு மனிதனின் உடலில் இருக்கும் பொருள்களைத் தனித் தனியாகப் பிரித்து விற்றால் எவ்வளவு விலை பெறும் தெரியுமா? கோடி கோடியாகப் பணம் சேர்க்கும் இந்த மானிடனின் உடலிலுள்ளபொருள்கள் ரூ. இருபத்தைந்துதான் பெறும். ஆனால், யானையோ இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்!

—"கல்லூரி"

புதுமுறை சங்க வாய்பாடு

(V. K. சேஷாத்திரி. B. A., L. T.,

Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

தெரிந்த பெயர்—

யூனிசெப்

—தெரியாத விவரம்

ஐக்கிய நாட்டு கிளை ஸ்தாபனங்களுள் ஒன்றாகிய இந்த ஸ்தாபனம் 1946ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ. நா. பொது சபையால் நிறுவப்பட்டது. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின்னர், யுத்தத்தினால் அவதிப்பட்ட நாடுகளில் அல்லலுறும் குழந்தைகளுக்கு உதவிபுரியத் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட போதிலும், 1950ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்த ஸ்தாபனம், பின்னணி நாடுகளில் உள்ள குழந்தைகளின் முன்னேற்றத்தையும் தன் கண்காணிப்பில் எடுத்துக் கொண்டது. 1953ஆம் ஆண்டிலிருந்து இது நிரந்தரமாக இத்துறையில் செயலாற்றும் வாய்ப்பைப் பெற்று விட்டது.

இப்பொழுது இந்த ஸ்தாபனத்தின் அலுவலகம் வட அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் இயங்குகிறது. இதன் கிளை அலுவலகங்கள் அநேகம் நாடுகளில் பணியாற்றுகின்றன. முப்பது நாட்டு பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழுவின் அதிகாரத்தின் கீழ் இந்த ஸ்தாபனம் இயங்குகிறது. மற்ற ஐ. நா. கிளை ஸ்தாபனங்கள் போலில்லாமல், இந்த ஸ்தாபனத்திற்கு வேண்டிய பொருள் உதவியை ஐ. நா. அங்கத்தினர்களாகிய மற்ற நாடுகளிலிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் சன்மானமாகப் பெறுகிறது. இது தவிர மற்றும் வேறு சில முறைகளில் கூட இந்த ஸ்தாபனம் நிதிதிரட்டுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, புத்தாண்டு வாழ்த்துரை அட்டைகள் விற்பனை.

தற்காலத்தில் உலகில் உள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை நூறு கோடி என்றும், அவர்களில் 75 கோடி பின்னணி நாடுகளில் வசிப்பவர்கள் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது தவிர ஒரு விநாடிக்கு மூன்று குழந்தைகள் வீதம் பிறந்து, திடுக்கிடும் அளவுக்கு இவர்களின் ஜனத்தொகையும் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. யூனிசெப் ஸ்தாபனத்தின் கவனம் இப்பின்னணி நாட்டுக் குழந்தைகளின் முன்னேற்றத்தில் செலுத்தப்படுகிறது. பெரும்பாலும் இக்குழந்தைகள் உண்ண உணவோ, உடுக்க உடையோ, வசிக்க இடமோ பெறவாய்ப்பில்லாமல் நோய்வாய்ப்பட்டு வாடுகின்றன. அநேகம் இடங்களில் போதிய அளவு மருத்துவ உதவி பெறாமல் எண்ணற்ற சிசுக்களின் மரணமும், பிரசவ நிலையில் தாய்களின் மரணமும் ஏற்படுவது சகஜமான சம்பவங்களாகி விட்டன.

இவ்வளவு இடுக்கண்களிடையே பிறந்து வளரும் இவர்கள், பிற்காலத்தில் மெலிந்து பலங்குன்றி காட்சி யளிக்கிறார்கள். இவ்வித மான சூழ் நிலைகளை ஒழித்துக் கட்ட இந்த ஸ்தாபனம் பாடுபடுகிறது. எந்தெந்த அரசாங்கம் குழந்தைகளின் நலனைப்பேணி செயலாற்ற முன்வருகிறதோ அவற்றிற்கு இந்த ஸ்தாபனம் வேண்டிய அளவு உதவியளிக்கிறது. தேவையான பொருள்களை வழங்குவதோடு மட்டு மல்லாமல், ஆரோக்கியம், குடும்ப நலன், நோய்த் தடுப்பு சிகிச்சை, சத்துள்ள உணவு ஆராய்ச்சி முதலிய துறைகளில் செயலாற்ற வேண்டிய சிப்பந்திகளைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளையும் அளிக்கிறது. பிரசவ நிலையங்களுக்கும், பாலர் ஆரோக்கிய நிலையங்களுக்கும் வேண்டிய உபகரணங்களை வழங்குகிறது. பால் பண்ணைகள் நிறுவுவதற்கு வேண்டிய உதவிகளை அளித்து, பால் பவுடர், வைட்டமின் முதலியவற்றைக் குழந்தைகளுக்கு விநியோகம் செய்கிறது. குழந்தைகளுக்குச் சத்து உணவை எளிய முறையில் செய்து காட்ட தாய்மார்களுக்குக் கற்பிக்கிறது.

யூனிஸெப் ஸ்தாபனம் முக்கியமாகத் தன் நோக்கத்தை நோய் தடுப்பில் செலுத்துகிறபடியால், ஏராளமாகப் பூச்சிகளை அழிக்கும் ரஸாயனங்கள், அம்மைப் பால், பெனிஸிலின், அதையொட்டிய மருந்துகள் முதலியவற்றை விநியோகம் செய்கிறது. இதன் சாதனைகளால் பத்து வருடங்களில் நம்பத்தகாத அளவுக்கு 100 அரசாங்கங்கள் பயன் பெற்றிருக்கின்றன. பிறந்ததிலிருந்து பிணி, பசி, அறியாமை இம்மூன்றின் பிடிப்பினால் குழந்தைகள் பெருவாரியாக பாதிக்கப் படுவதை அறவே ஒழிக்க, மேலும் மேலும் வழிகள் கண்டுபிடிக்க இந்த ஸ்தாபனம் முன் வருகிறது.

—'ஆனந்தவிகடன்'

புற்று நோயைக் குணமாக்கும் மாபெரும் இயந்திரம்!

ஸ்டட்கார்ட் (டாட்)—உலகிலேயே மிகப் பெரியதும், சக்தி வாய்ந்ததுமான வெப்பக்கதிர் வீச்சு இயந்திரத்தை மேற்கு ஜெர்மனியிலுள்ள பிரபல மின்சார சாதன நிறுவனம் தயாரித்துள்ளது. இது 4·2 கோடி வால்ட் சக்தி வாய்ந்தது. புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கு இந்த இயந்திரம் பயன்படுத்தப் படுகிறது. இந்த இயந்திரத்தின் எடை 8 டன். புற்றுநோய் திசுக்களின் மீது அதிக அளவில் வெப்பக்கதிர் படும்படியாகவும், அதே சமயத்தில் தோல் பகுதியில் குறைந்த அளவு கதிர் வீசும்படியாகவும் இந்த இயந்திரத்தில் அமைக்க முடியும்.

ஐந்து வயதுப் பிள்ளைக்குத் தைத்த சொக்காய் ஐம்பது வயதான பெரியவருக்குப் பொருந்துமா ?

சிந்தனைக்கு

நெ. து. சுந்தரவடிவேலு (கல்வி இலாகா இயக்குநர்)

ஒரு மீட்டர். இது திட்ட வட்டமான பொருளைக் கொடுக்கிறது. மீட்டரின் நீளம் தமிழ் நாட்டில் ஒன்று; கேரள நாட்டில் வேறொன்றா? இல்லை. மீட்டர் நீளம் பாரதத்தில் ஒன்று. பர்மாவில் பிறிதொன்றா ? இல்லை. மீட்டர் என்பது பார் முழுவதற்கும் ஒரே நீளம்.

மீட்டர் என்பது நீட்டலளவை. திட்டவட்டமான நீட்டலளவை. எங்கும் கூடுதல், குறைதல் இல்லாத நீட்டலளவை. உலகெங்கும் ஒரே நீளம். இது இக் காலத்திற்கு மட்டுமா? எக்காலத்திற்கும் பொருந்துமா? மீட்டர் என்பது முக்காலத்திற்கும் ஒரே அளவைதான். எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் மாறாத, அந்த அளவையாக இருப்பதால் பிற நீளங்களை எங்கும், எப்போதும் யாரும் மீட்டர் அடிப்படையில் அளந்து கணக்கிடலாம்.

லிட்டர். இது, எக்காலத்திற்கும் ஒரே அளவை. எந்த நாட்டிற்கும் ஒரே அளவை; காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறாத முகத்தல் அளவை; திட்டவட்டமானது. ஆகவே ஏமாற்றாதது; மயக்காதது. குழப்பாதது; மாறாத தெளிவானது. திட்டவட்டமானது. இதை அடிப்படையாகக் கொண்டு, எதையும் தெளிவாக அளந்து முடிவு கட்டிவிடலாம்.

நிறுத்தலளவையும் அப்படியே. கிராம், கிலோ கிராம் என்பவை என்றும் ஒரே எடையைக் குறிக்கும். காலத்திற்குக் காலம் குறைவதுமில்லை, மிகுவதும் இல்லை. எடை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எங்கும் என்றும் இருப்பது எவ்வளவு வசதி? வேறு மாதிரி இருந்தால், எத்தனை ஏமாற்று நுழையும்; எத்தனை புகைச்சல் கிளம்பும்; எத்தனை எரிச்சல் ஏற்படும்? வளரக்கூடிய வசவுகளுக்குத்தான் வரம்பு இருக்குமா ?

மயக்கம்

தெளிவான, திட்டவட்டமான பொருள் உள்ள சொல்லைப் பயன்படுத்துவதால், மயக்கம் தலைகாட்டுவதில்லை; குழப்பம் நுழைவதில்லை; கருத்து மோதல் நிகழ்வதில்லை.

ஒரு பொருள், தெளிபொருள், நிலைபொருள் சொற்கள் எல்லாவற்றிற்கும் கிடைக்கிறதா? இல்லை. எத்தனையோ கருத்துக்களைத் திட்டவட்டமான பொருள் பொதியாத சொற்களால் தெரிவிக்க நேரிடுகிறது. விளைவு என்ன? கூறுவோர்

கொண்ட கருத்து ஒன்று; அதைக் கேட்போர் கொள்ளும் கருத்து பிறிதொன்று. இத்தகைய மயக்க நிலே, அன்றாட நிகழ்ச்சி. அனைவரும் அனுபவிக்கும் நிகழ்ச்சி. பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்போமா?

பணக்காரர். இது எளிதான சொல். எல்லோருக்கும் தெரிந்த சொல். அடிக்கடி கேட்கும் சொல். ஆனால் ஒரே பொருளில் வழங்கும் சொல்லா? இன்றைய நிலையிலும், தமிழ்நாட்டார் ஒருவரை 'பணக்காரர்' என்று குறிப்பிடும்போது, அதன் பொருள் என்ன? பஞ்சாபியர் ஒருவரை, 'பணக்காரர்' என்று அறிமுகப்படுத்தும்போது, அதன் பொருள் என்ன? அமெரிக்கர் தம்மவர் ஒருவரைச் சுட்டிக்காட்டி 'பணக்காரர்' என்றால், அதற்குப் பொருள் என்ன? சொல் என்னவோ ஒன்றுதான். 'பணக்காரர்' என்ற அதே சொல், வெவ்வேறு செல்வ நிலையிலே உள்ள தமிழர் வாயிலே ஒரே பொருளிலும், பஞ்சாபியர் வாயிலே மற்றொரு பொருளிலும், அமெரிக்கர் வாயிலே வேறொரு பொருளிலும் பயன்படுகிறது.

'பணக்காரர்'

ஆலே இல்லாத ஊரிலே இலுப்பைப் பூ சர்க்கரை. தமிழருக்கோ ஐந்தாறு இலட்சம் உடையவர் பணக்காரர். பஞ்சாபியருக்கு, பத்துப் பதினைந்து லட்சம் உடையவரே பணக்காரராகத் தெரிவார். பத்து லட்சமே யூனிட்டாகக் கொண்ட அமெரிக்கரோ பல பத்து லட்சம் கொண்டவரையே பணக்காரராக அறிமுகப்படுத்துவார். இதிலிருந்து தெரிந்து கொள்வது என்ன? 'பணக்காரர்' என்ற அதே சொல், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருளைக் கொடுக்கிறது. மீட்டர், லிட்டர், கிலோ கிராம் என்பவை போல், 'பணக்காரர்' என்ற சொல் திட்டவட்டமான கூடுதல் குறைதல் இல்லாத அளவையல்ல. ஆகவே, அதற்குப் பயன்படும் இடத்திற்கேற்ற பொருளைக் கொள்ள வேண்டும். இல்லையேல் மயங்கிவிடுவோம்; ஏமாந்துவிடுவோம்; தவறிவிடுவோம்.

கல்வித்தரம்

அடிக்கடி கேட்கும் மற்றொரு சொற்றொடரைக் கவனிப்போமா? 'கல்வித்தரம்' என்ற சொல் அடிக்கடி அடிபடுகிறது. மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்காத ஓங்கார மூர்த்தியும் இச்சொல்லைக் கையாளுகிறார். "அண்டசராசரங்களும் இதுவே" என்று ஏதோ ஒரு சிறு துறையின் ஒரு சிறு பகுதியில் மூழ்கி மூழ்கி வந்து மூச்சு விடும் பேராறிஞர்களும் கையாளுகிறார்கள்.

எதன் பொருட்டுக் கையாளுகிறார்கள். 'இதிலே கல்வியின் தரம் வளரவேண்டும்; இவ்வளவிற்கு உயரவேண்டும்' என்று குறிக்கோளைச் சுட்டிக்காட்டுவர்? எங்கோ பதினாயிரத்தில் ஒருவர் அப்படிப் பயன்படுத்துவோர்; பயனுடைய சொல்லுவோர்; மற்ற

விரோ சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகளாகப் பயன்படுத்துவர். 'கல்வியின் தரம் குறைந்து விட்டது' என்று இடித்துரைக்கவே இச்சொற்றொடர் பயன்படுகிறது. பேரறிஞர் வாயிலே மட்டுமல்ல; அவர் வாய்ச்சொல் கேட்ட, ஓதியறியாத ஓங்கார மூர்த்தியின் வாயிலும். இது தவறல்ல; இதைத் தடுக்கவல்ல, நான் அழைப்பது; ஓங்கார மூர்த்தியும் மனிதரல்லவா? இவருக்கு மட்டும் பேச்சுரிமை இல்லையா?

'கல்வித்தரம்' என்பதற்குப் பேரறிஞர் கொள்ளும் பொருள் என்ன? ஓதியறியார் கொள்ளும் பொருளென்ன? இரண்டும் ஒன்று? வெவ்வேறுயின், எந்தக் கல்வித்தரத்தைப் பற்றிப் பேசுகிறோம் என்று வரையறுத்துக் கொள்ள வேண்டாவா? திட்ட வட்டமான ஒரு பொருளை அதற்கு முடிவு செய்துவிட்டு, பின்னர் விவாதித்தால் அல்லவா, மயங்க மாட்டோம், ஏமாறமாட்டோம், தவறமாட்டோம்.

தமிழ் நாட்டில் தேவாரப் பாடசாலைகள் உள்ளன. எங்கும் இல்லாவிட்டாலும் சிற்சில இடங்களிலாவது உள்ளன. வேத பாடசாலைகளும் அப்படியே அங்கும் இங்கும் உள்ளன. இவற்றில் சில பன்னெடுங்காலமாக இயங்கி வருகின்றன. ஒரு தேவாரப் பாடசாலையைக் குறிப்பிட்டு அதன் தரம் எப்படி என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்? எதைக் கொண்டு முடிவுசெய்வீர்கள்? '1901-ம் ஆண்டிலே எத்தனை தேவாரங்களை மனப்பாடஞ் செய்தார்கள். எத்தனை தேவாரங்களைப் பண்ணோடு பாடி மகிழ்வித்தார்கள். பின்னர் 1911-ல் இவற்றின் எண்ணிக்கை என்ன? 1921-ல் என்ன? 1931-ல் என்ன? 1961-ல் என்ன? என்று தெரிந்துகொண்டல்லவா அப்பாடசாலையின் தரத்தை மதிப்பிடுவீர்கள். வேத பாடசாலையின் தரத்தை மதிப்பிடுவதற்கு வேறு அளவுகோலா? இல்லை. வேத பாராயணத்தின் வெற்றியைக்கொண்டு வேதமோதுதலின் திறமையைக்கொண்டு வேத பாடசாலையின் தரத்தை மதிப்பிடுவீர்கள். அல்லவா?

மதிப்பீடு

தேவாரப் பாடசாலையின் வேலை தேவாரங்களைக் கற்றுக் கொடுத்தல், நினைவில் வைக்கச் செய்தல், பொருத்தமான பண்ணோடு பாடவைத்தல், ஆண்டுக்கு ஆண்டு ஏன் தலைமுறைக்குத் தலைமுறைகூட தேவாரங்களின் எண்ணிக்கை வளருவதில்லை. 1901-ம் ஆண்டிலே இருந்த தேவாரப் பாடல்களே இன்றும், நாளையும். வேதங்களும்; நீங்களும் நானும் சேர்த்துக்கொண்டே போவன வல்ல. அன்றும், இன்றும், நாளையும் அதே அளவின. ஓத வேண்டியவை முன்பே வரம்பு கட்டப்பட்டவை.

ஆற்ற வேண்டிய பணிகளும் ஒரு சில; குறுகியவையும் கூட. கற்றுக் கொடுக்கவேண்டியவையும் ஓரே அளவின. வளராதன,

மாறுதன. எனவே, தேவாரப் பாடசாலையையோ, வேத பாட சாலையையோ தர மதிப்பிடுதல் சிக்கலானதல்ல, குழப்பமானதல்ல.

சாதாரணக் கல்விச்சாலை அப்படியா அமைந்துள்ளது? சிக்கலான அமைப்பல்லவா அது? தேவாரத்திற்காகவே ஒரு பள்ளி. வேதத்திற்காகவே ஒரு பள்ளி என்பதைப் போல், எளிய சிக்கலற்ற அமைப்புகளாக பொதுப் பள்ளிக்கூடங்கள்? பிந்தியவற்றில் எத்தனையோ மொழிகள்? எத்தனையோ பாடங்கள் அவற்றில் கிடைக்கும் கல்விக் கலவையில் என்னென்னவோ சேருகின்றன. என்னென்ன அளவிலோ சேருகின்றன. நீட்டல் அளவையும், நிறுத்தல் அளவையும், முகத்தல் அளவையும் ஒரே நேரத்தில் கையாளவேண்டியிருந்தால் எவ்வளவு தொல்லையாக இருக்கும். அதே தொல்லைதான், பல மொழி பல பாடங்கள், கற்றுக்கொடுக்க வேண்டிய பொதுப் பள்ளிகளை, பல வகைப் புலமைகளை, பல வகைத் திறமைகளை வளர்க்க கடமைப்பட்டுள்ள பொதுக் கல்விக் கூடங்களை மதிப்பிடுதல்; அவ்வேலை சிக்கலானது, மயக்கந்தருவது, பொய்மான் வேட்டையாகி விடக்கூடியது. ஆகவே, அதிக விழிப்போடு பலவற்றைத் துல்லியமாக எடைபோடத் தெரிய வேண்டும். அவற்றில் ஒவ்வொன்றிற்கும் உரிய மதிப்புக் கொடுக்கத் தெரிய வேண்டும்.

பருப்பும் தேவை, நெய்யும் தேவை. தேவை என்பதனால், ஒரு கிலோ நெய்யிற்குக் கொடுக்கும் விலையை, ஒரு லிட்டர் பருப்பிற்குக் கொடுப்பார்களா? ஒரு கிலோ அவரைக்குக் கொடுப்பீர்களா? அதேபோல் கல்வி விளைவுகளைக் கணக்கிடுவதிலும், பல அளவைகளை பல 'விலை'களைக் கையாள வேண்டும்.

உயர்நிலைக் கல்வி

1925 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியைப் பார்ப்போம். அன்றைய மாணவன் ஆங்கில மொழியைக் கற்பதில் எட்டு 'பீரிடு'கள் செலவிட்டான். அதுமட்டுமா? ஆங்கிலத்தின்மூலமே பிற பாடங்களை உயர்நிலை வகுப்புகளில் கற்றான். இரு 'பீரிடு'களே தமிழுக்காகச் செலவிட்டான். முப்பத்தைந்து 'பீரிடு'களிலே, முப்பது 'பீரிடு'கள் ஆங்கிலத்தில் எண்ணினான்—இல்லை எண்ண முயன்றான்; பேசினான்; எழுதினான். ஆங்கிலமே எல்லாமென்றிருந்த அந்நிலையில் அம்மாணவனிடம் எதிர்பார்க்க வேண்டிய ஆங்கிலப் புலமையும், சொற்திறமும் ஒரு அளவு. இன்று அதே அளவைக் காண எங்கே தேட வேண்டும்? தமிழைப் பாட மொழியாகக் கொண்ட, சாதாரண உயர்நிலைப் பள்ளியிலா? ஆங்கிலத்தைப் பாட மொழியாகக்கொண்ட பிரிவிலா? முந்தியதன் மாணவர்களது ஆங்கிலச் சொற்றிறம் குறைந்த அளவாகத்தானே இருக்கமுடியும்? 'அப்பளக் கடையிலே' ரொட்டியும் கேக்கும் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாமா? கிடைக்க

வில்லையென்று எரிச்சல் படலாமா? அதனால் மட்டும் 'அப்பளக் கடை' தரம் குறைந்தது என்று முடிவு கட்ட முடியுமா? பலன் குறைந்தது என்று முடிவு சொல்ல முடியுமா? அத்தகைய முடிவு சரியானதாகுமா?

காலப் போக்கில் தேவைகள் மாறின. ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த தமிழருக்கு இரண்டு 'பிரீட்' தமிழ் போதுமானதாயிருந்தது. இந்தி மொழிக் கல்வி கருவிலேயே இருந்தது. இன்று தமிழுக்கும் 'பிரீட்' அதிகமாகி விட்டது. இந்திக்கும் காலம் ஒதுக்கநேரிட்டது. கல்விக் கலவை மாறிவிட்டது. அம்மாற்றத்தை அறிந்து அதற்கேற்றபடி அளக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொன்றிற்கும் தனித் தனி உரிய விலைபோடத் தெரிந்துகொள்ளவேண்டும். பின்னர் மொத்த மதிப்பீடு சொல்ல வேண்டும்.

'தரமான கல்வி' என்பதற்குஒரே தரமான பொருள் இல்லாதபோது, 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்றபடி, 'கல்வித்தரம் குறைந்துவிட்டது' என்று கும்பலோடு கோவிந்தா போடுவது, பொறுப்பானமுடிவா? சரியான முடிவா? வழிகாட்டும் முடிவா?

தேவாரப் பாடசாலையில் திறமையாகக் கற்ற அத்தனை பேரும் தண்டபாணி தேசிகர்களானதில்லை. மருத்துவக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தவர்கள் அத்தனை பேரும் குருசாமி முதலியாரானதில்லை. விஞ்ஞானப் பட்டம்பெற்ற ஒவ்வொருவரும் சி. வி. இராமன்கள் ஆனதில்லை. துறவிகள் அத்தனை பேரும் ஞானியார் சுவாமிகள் ஆனார்களா? தமிழ் கற்ற அனைவரும் சாமிநாதய்யர்களாகவில்லை. முந்திய தலைமுறைகளிலும் மேதைகள் சிலரே. இந்தத் தலைமுறையில் மட்டும் அத்தனை பேர்களும் மேதைகளாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கலாமா? எல்லோரும் மேதைகளாகாததால் தரம் குறைந்தது என்று கூறலாமா? பலராவது ஆக வேண்டாவா என்று கேட்கிறீர்களா? பொறுத்திருங்கள். காலங் காட்டும், மேதைகள் சிலர் பலராகும் காட்சியை.

கேள்வி பதில்

அப்படியானால் எல்லாம் சரியாக இருக்கிறதா? அதற்கு மேல் தரத்தை வளர்க்க முடியாதா? வேண்டாவா? இக்கேள்விகள் எழலாம். இதோ பதில்.

வளர்க்க முடியும். வளர்க்க வேண்டும். ஏன்? ஐந்து வயது பிள்ளைக்குத் தைத்த சொக்காய் ஐம்பது வயதுப் பெரியவருக்குப் போதுமா? எவ்வளவு தாராளமாகத் தைத்து வைத்திருந்தாலும் போதுமா? போதாது. ஐம்பது வயதிற்கேற்ற சொக்காய் தைக்க வேண்டும். இப்போதைக்கு இதை உணர்ந்தால் போதும். மேற்கொண்டு ஆக வேண்டியதைச் சிந்தித்து முடிவு செய்வோம். சிந்தியுங்கள். நன்கு சிந்தியுங்கள்.

—தினமணி

பாலும் கிண்ணமும்

பால் கெடாதவாறு, மூடி இட்டுக் காத்தலும் வேண்டும்; அதைக் கெடுக்காதவாறு கிண்ணத்தைத் தூய்மையானதாக அமைத்தலும் வேண்டும். 'இது தான் வேண்டும்; அது வேண்டாம்' என்று முரண்படுவதால் போராட்டம்தான் மிஞ்சும்; பயன் விளையாது.

களிம்பு பிடித்த ஒரு கிண்ணத்தில் பால் வார்த்து வைக்கிறோம். பால் கெட்டுவிடுகிறது. "தூய்மையான வெண்கலக் கிண்ணத்தில் அந்தப் பாலை வார்த்து வைத்திருந்தால் அது கெட்டிருக்காது," என்று சிலர் சொல்லுகிறார்கள். "பாலின் ஒவ்வொரு துளியும் தூய்மையாக இருந்திருந்தால் பால் எப்படிக் கெட்டிருக்கும்?" என்று சிலர் கேட்கிறார்கள். இருசாராரும் போராடுகிறார்கள். பாலும் முற்றிலும் கெட்டுவிடுகிறது; கிண்ணமும் சீர்படுவதில்லை. உண்மையாகவே பால் கெடாமல் காப்பாற்றும் முயற்சி இருந்திருந்தால் கிண்ணமும் தூய்மையானதாகப் பார்த்துவைத்திருக்க வேண்டும்; பாலும் தூய்மை கெடாதவாறு மூடிக் காத்திருத்தல் வேண்டும். செய்ய வேண்டிய முயற்சியைத் தக்கவாறு செய்யாத காரணத்தால், போராட்டம் ஏற்படுகிறதே தவிரப் பயன்படுவது இல்லை.

இதுதான் இன்றைய சமுதாய நிலை. "தனி மனிதர் அறவோராக, நல்லவராகப் பண்பட்டுவிட்டால் சமுதாயம் சீராக அமைந்து விடும்" என்று சிலர் வற்புறுத்துகிறார்கள். அவர்கள் சமயம், அறம், ஒழுக்கம் என்னும் பெயர்களால் பல விதிகள் அமைத்துத் தனி மனிதரைத் திருத்த இடைவிடா முயற்சி செய்கிறார்கள்.

வேறு சிலர், "சமுதாயத்தைப் பிணைத்துள்ள கொள்கைகளையும் சட்டங்களையும் திருத்தி அமைத்தால், தனி மனிதர் தாமாகவே திருந்தி விடுவார்கள்" என்று வற்புறுத்துவார்கள். அவர்கள் ஆட்சி முறையை மாற்றி அமைத்துப் புதிய புதிய சட்டங்களை ஆக்க விரும்புகிறார்கள்; ஆக்குவதால் பயன் உண்டு என்று நம்புகிறார்கள். ஒரு பக்கம் சமயத் தொண்டரும், அறவோரும். மற்றொரு பக்கம் புரட்சியாளரும், சீர்திருத்தக்காரரும். இரு சாரார்க்கும் போராட்டம் நடந்தபடியே இருக்கிறது. தனி மனிதரும் திருந்தவில்லை; சமுதாயமும் சீர்படவில்லை.

டாக்டர் மு. வரதராசனார்

இன்றைய சமுதாயத்தில் படித்தவர் பலர்; பக்தியுடையோர்

பலர்; அற நூல்களை மதிப்பவர் பலர்.

ஆயினும், ஏமாற்றம், வஞ்சம், லஞ்சம் முதலியவை பேரளவில் உள்ளன. ஒழுக்கத்தை வற்புறுத்திப் பேசுவோரில் சிலர், தனி வாழ்க்கையில் ஒழுக்கம் அற்றவர்களாக இருக்கின்றனர். இறைவன் புகழை நெக்குருகிப் பாடி வழிபடுவோரில் சிலர், இரக்கம் அற்றவர்களாக உள்ளனர். அற நூல்களின் கருத்துக்களை எடுத்துரைத்து முழங்குவோரிலும் சிலர் பொல்லாத கயவர்களாக உள்ளனர். அவர்களின் தனி வாழ்க்கையை ஆராயும்போது, "இவர்களே திருந்தாதபோது வேறு யாரை, எப்படித் திருத்த முடியும்?" என்று நெஞ்சம் ஏங்குகிறது. வழக்கறிஞர்களின் உருட்டல், மிரட்டல், கொடிய குற்றவாளிகள் விடுதலை பெற்று மகிழ்தல், எளியவர்கள் குற்றவாளிகளாய்க் கடுந் துன்பம் உறல், கள்ள வாணிகம் செய்வோர் சமுதாய மதிப்பு பெற்றுக் களிப்புறல், பித்தலாட்டக்காரர் பெரிய அன்பர்போல் நடித்து உள் ஒன்று புறம் ஒன்றாக வாழ்ந்து ஏய்த்தல் முதலியவற்றை உலகத்தில் காணும்போது இளைஞர்களின் மனம் கொதித்து எழுகின்றது. அந்தக் கொதிப்பும் நாளடைவில் வாழ்க்கை அநுபவம் படியப்படிய அடங்கி விடுகிறது. காலப்போக்கில், 'உலகம் இப்படித்தான்' என்று உணர்ந்து அமைதியோ சோர்வோ அடைகிறார்கள்.

> நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே. பணக்காரரது கொடுமைக்கு உட்படும்போது ஏழைகட்கு அவசியம் வேண்டிய மருந்தும் பலமே. கற்றோரது கொடுமைக்கு உட்படும்போது கல்லாதவர்க்கு அவசியம் வேண்டிய மருந்தும் பலமே பாவிகளின் கொடுமைக்கு உட்படும்போது பிறபாவிகட்கு அவசியம் வேண்டிய மருந்தும் பலமே. —விவேகாநந்தர்

இந்த நிலையில், தனி மனிதர் திருந்துவது எவ்வாறு?

அறநெறியை எடுத்துரைப்பவர் மட்டும் அல்லாமல், அந்நெறியில் படிந்து வாழ்பவரும் சிலர் உள்ளனர். அவர்களைப் பார்த்தும் பழகியும் பலர் திருந்தவில்லை. இந்த நிலை இன்று மட்டும் உள்ளது அல்ல. திருவள்ளுவர் போன்ற பெருமக்கள் வாழ்ந்த காலத்தில், ஏறக்குறைய இதே நிலை இருந்திருக்கிறது என்று கருதலாம்.

"கனவினும் இன்னாது மன்னோ;
வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு"

என்னும் மொழி, திருந்தாத கொடியவர்களின் கொடுமையை உணர்ந்து வருந்திய உள்ளத்தில் இருந்து எழுந்ததாகத் தோன்றுகிறது.

காந்தி அடிகள் மிகத் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்த அறவோர். உலகம் கண்டிராத பெரும்

போராட்டத்தில் ஈடுபட்டும், தம் தூய அறவாழ்க்கை மாசு படாத வாறு காத்துக் கொண்ட சான்றோர் அவர். அவரைக் காணவும், அவரைப்பற்றி அறியவும், அவருடைய நல்லுரைகளைக் கேட்டு உணரவும் கோடிக் கணக்கான மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஆயினும் பயன் என்ன? அவர் காலத்திலும் தீயவர்களும் வஞ்சகர்களும் வாழ்ந்தனர். அவர் மிதித்த மண்ணையே மிதித்துத் திரிந்தனர். அவரைக் கண்டு அறிந்து அவருடைய நல்லுரைகளைக் கேட்டு உணர்ந்த மக்களுக்கு இடையிலேயே வாழ்கின்றோம் நாம். ஆனாலும், நம் சுற்றுப்புறத்தில் நாம் காண்பன என்ன? பேய்த் தன்னலம் ஓய்ந்ததா? கள்ள வாணிகம் ஒழிந்ததா? சுரண்டல் ஒழிந்ததா? எல்லாம் நடமாடக் காண்கிறோம். கோடிக் கணக்கான மக்களுக்கு இடையே, நூற்றுக் கணக்கானவர்கள் மட்டும் நல்லவர்களாக வாழ்ந்துபயன் என்ன? தனி மனிதர் திருந்துவது என்பது அந்த அளவில் நின்றால் உலகம் பொல்லாதது என்று சோர்வு அடைவார்கள்; அல்லது மனம் நைந்து துன்புறுவார்கள். மற்றவர்கள், அவர்களை ஏமாந்தவர்களாகக் கருதுவார்கள்; அல்லது, ஓரளவுக்குப் புகழ் பெற்று விட்டால், உத்தமர் என்று போற்றிக் காலிலும் விழுந்து வணங்குவார்கள். இந்தப் பயன் போதுமா?

பாலில் சத்துப் பொருளும் உள்ளது; கெடுவதற்கு ஏற்ற தன்மையும் அமைந்துள்ளது. மனிதருடைய மனமும் அத்தகையதே. மனதில், உயர்ந்து விளங்குவதற்கு உரிய நல்ல இயல்புகளும் உண்டு; தாழ்வதற்கு உரிய தீய இயல்புகளும் உண்டு.

பெரும்பாலானவர்கள், நல்லவர்களைச் சார்ந்து இருக்கும்போது நல்ல மனத்தோடு விளங்குகிறார்கள். அந்தச் சார்பு மாறியவுடன் அவர்களின் இயல்பும் மாறி விடுகிறது. மனத்தின் இயல்பு இவ்வாறு இருக்கும்போது அவர்களை நல்லவர்கள் என்பதா? கெட்டவர்கள் என்பதா? இரு இயல்பும் கலந்தவர்களாகவே பெரும்பாலோரை மதிப்பிட வேண்டும். அத்தகைய பெரும்பாலோரைக் கொண்டு சமுதாயத்தைச் சீர்படுத்துவதற்கு உரிய வழி என்ன என்றே ஆராய வேண்டும்.

'க்யூ' என்னும் வரிசையை இப்போது அங்கங்கே காண்கிறோம். அது பலவகையிலும்

எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள், பலமுடையராகுங்கள், முழுபொறுப்பையும் உங்கள் மீதே சுமத்திக் கொண்டு, உங்களது சொந்த விதியைப் படைத்தவர் நீங்களே என்பதை அறியுங்கள். உங்கட்கு வேண்டிய முழுப் பலமும் முழுத்துணையும்உங்களுக்குள்ளே இருக்கின்றன. ஆதலால் வருங்கால வாழ்க்கையை உமது பிரியப்படி அமைத்துக் கொள்ளுங்கள். —இராமகிருஷ்ணர்

நல்லது என்பதை உணர்கின்றோம்! ஆயினும் அதை வற்புறுத்துவதற்கு ஆள் இல்லாதபோது—போலீசார் ஒருவரேனும் இல்லாதபோது—அந்த ஒழுங்கு முறையைக் கையாள்வது காணோம். எல்லோரும் கும்பலாகி விடுகின்றனர். வற்புறுத்துவதற்கு ஆள் இல்லாவிட்டாலும் இரண்டு பேர் அடுத்து நிற்க முடியாதபடி வழியின் அகலத்தைக் குறைத்து, இரண்டு பக்கமும் நீண்ட இரும்புக் கம்பிகளோ மரச் சட்டங்களோ அமைக்க வேண்டி இருக்கிறது. அப்படி அமைத்தால் தான் மக்கள் அந்தச் சட்டங்களுக்கு இடையே ஒழுங்கு முறையுடன் நிற்கிறார்கள். இந்த மக்களுக்கு நல்ல மனம் இல்லை என்று சொல்ல முடியுமா? ஒழுங்கு முறையில் நம்பிக்கை எல்லோர்க்கும் உள்ளது. ஆனால் புறத்தே, ஆள் வாயிலாகவோ, சட்டங்களின் வாயிலாகவோ ஒரு சிறு வற்புறுத்தலேனும் அமைந்தால்தான் ஒழுங்கு முறையைப் போற்றி நிற்கிறார்கள். இல்லையானால் அதைக் கைவிட்டுக் கும்பலாகக் கூடி விடுகிறார்கள். அதற்குக் காரணம், முந்திக் கொள்ள வேண்டும் என்ற தன்னல உணர்வு அவர்களின் மனதில் இருப்பதே ஆகும்.

இது ஒரு சிறு செயல் பற்றியது ஆகும். இனிப் பெரியது ஒன்றை ஆராய்வோம்.

'பிறருக்கு உதவி செய்ய வேண்டும்' என்ற நல்லெண்ணம், குழந்தைப் பருவம் முதல் எல்லோர்க்கும் இயல்பாக உள்ளது. அது போலவே, கிடைத்ததைத் தமக்கு என்று சேர்த்துவைக்க வேண்டும் என்ற தன்னலமும் குழந்தைப் பருவம் முதற் கொண்டே எல்லோர்க்கும் இயல்பாக அமைந்துள்ளது. சமய உணர்வாலும், அறநெறிப் பற்றாலும் ஒரு சிலர் ஈகையில் சிறந்தவர்களாக—வள்ளல்களாக வாழ்தல் உண்டு. ஆனால், பெரும்பாலோர் அவ்வாறு வாழ்ந்ததாகவோ, வாழ்வதாகவோ சொல்லுதல் இயலாது. அண்மையில், மிக்க வரிகள் விதித்துச் சட்டங்கள் சில செய்யப்பட்டதால் இதுவரையில் கொடுத்து அறியாதவர்களும் இப்போது கொடுத்துப் பழகுவதைக் காண்கிறோம். புறத்தே அமைந்த இந்தச் சிறு வற்புறுத்தலால் பலரும், கொடுக்கும் மனம் பெற்றவர்களாக மாறியுள்ளனர்.

'ரூபாயில் பன்னிரண்டு அணா வருமான வரியாகக்கொடுக்கப்பட வேண்டும் என்ற சட்டம் கடுமையாக அமைந்த பிறகு, "அரசாங்கத்திற்கு, அரசாங்கச் செயல்களுக்குப் பெரும் பங்கை வாரிக் கொடுப்பதைவிடத் தாமாகவே அறச் செயல்களுக்கு ஒரு பங்கேனும் கொடுப்பது மேன்மை" என்று உணர்ந்து விட்டனர். அத்தகைய மன மாறுதலின் பயனாக இன்று பல புதிய கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும், தொழிற் கல்லூரிகளும், அற நிலையங்களும் ஏற்பட்டு உள்ளன. சட்டத்தால் ஆகிய அந்த வற்புறுத்தல்

இல்லையானல், இத்தனை கல்லூரிகள் முதலியவை இவ்வளவு விரைவில் ஏற்பட்டிருத்தல் இயலாது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பல பல்கலைக் கழகங்கள் தனிப்பட்டவர்களின் நன்கொடையினல் நடைபெறுகின்றன என்றல் அதற்கு முதன்மையான காரணம் என்ன?

'இறந்தவரின் சொத்தின் முதல் பங்கு அரசாங்கத்திற்கு' என்று சட்டம் அமைந்ததுதான் அதற்குக் காரணம். அதனல் இறப்பதற்கு முன்பே சிலர் சொத்தில் ஒரு பங்கைக் கொடுத்து வள்ளல்களாய் வாழும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பொது நிலையங்களுக்கும், அறச் செயல்களுக்கும் செல்வத்தை வழங்கும் கொடைத் தன்மை ஒருபுறம் நிற்க, தம் சொத்தைத் தம் வயிற்றில் பிறந்த மக்களுக்குப் பங்கிடும் பங்கீட்டு முறையிலும் வேறுபாடு கலந்திருப்பதைக் காணலாம். ஆயிரங் காணி நன்செய் நிலம் உடைய பாட்டனுக்கு வயது தொண்ணூறு இருக்கலாம். அவருடைய மக்கள் முதுமையை நெருங்க, அவருடைய பேரன்மார், நாற்பது நாற்பத்தைந்து வயது உடையவர்களாய் வளர்ந்திருக்கலாம். அந்த நிலையிலும் ஆயிரம் காணி நன்செய் நிலமும் அந்த ஒரு கிழவர் பேரிலே இருக்கும். அவர் என்று கண்ணை மூடுவார் என்று மக்களும், பேரரும் சொத்துரிமை பெறக் காத்துக்கொண்டிருப்பார்கள். இப்படியே பல குடும்பங்கள் இருந்த நாடு இது. ஆனல், இன்று காணும் நிலைமை என்ன?

தந்தைக்கு வயது நாற்பது—"மகனுக்கு என்று பதினெட்டு வயது நிரம்பும்" என்று அவர் காத்திருக்கிறர் அவனுக்கு வயது நிரம்பியவுடன் சொத்தைப் பிரித்து ஒரு பகுதியை அவனுக்கு உரிமை ஆக்குகிறர். பெரும்பாலான குடும்பங்களில் இந்த இரண்டு மூன்று ஆண்டுகளில், இவ்வாறு சொத்தைப் பிரித்து எழுதிவைக்கும் முறை பரவிவிட்டது. தொண்ணூறு வயதான பாட்டன்மார்களும் மனம் வந்து செய்ய முடியாத செயலை, இன்று நாற்பது வயது உள்ள தந்தையரும் செய்ய நேறப்படுவதற்குக் காரணம் என்ன? எல்லோரும் சொத்தில் பற்றுக் குறைந்தவர்களாக மாறிவிட்டார்களா? அது தான் இல்லை. சொத்து வரி என்ற பெயரால் அமைந்த புதிய சட்டத்தின் வற்புறுத்தல் தான் இதற்குக் காரணம்.

இதுதான் பெரும்பாலானவர்களின் மனநிலை. இந்தப் பெரும்பாலோரைக் கருதியே எந்தச் சீர்திருத்தமும் மாறுதலும் செய்யப்படவேண்டும்.

ஒரு சிலர் எந்நிலையிலும் மாருத நல்ல மனப்பான்மை உடையவர்களாக இருத்தல் உண்டு. அவர்கள் மிகமிகச் சிறுபான்மையர். அத்தகையோர் அன்றும் உண்டு; இன்றும் உண்டு.

சட்டத்தின் வற்புறுத்தல் இல்லாமலே சொத்தை எல்லாம்

நன்கொடை ஆக்கும் பச்சையப்பர் போன்ற வள்ளல்கள் மிக மிகச் சிலரே.

தன்னந்தனியான இடத்திலும், காலில் விழுந்த பெண்ணையும் சிந்தையாலும் தொடக் கூசுகின்ற ஒழுக்க வீரரும் மிக மிகச் சிலரே.

ஆயிரக்கணக்காக லஞ்சம் கிடைக்கும் வாய்ப்பு உள்ள தொழிலில் இருந்தும், 'நூறு ரூபாய்ச் சம்பளமே நமக்கு உரிமையானது' என்று அமைதி பெற்று எளிய கணக்கராக வாழ்க்கை நடத்திப் போதிய நலன்களும் பெறுமல் வாழ்வைக் கழிக்கும் உண்மையாளரும் மிக மிகச் சிலரே.

இத்தகைய ஒரு சிலரைப் பார்த்து, இவர்களைப்போல் தனி மனிதர் திருந்திவிட்டால் சமுதாயம் சீர்பட்டுவிடும் என்று கனவு காண்பதும் வீண்.

தனி மனிதர் திருந்தவேண்டும் என்று அறநெறிகளை எடுத்துரைத்தலும் வேண்டும்; அவர்களின் நன்மனத்திற்கு ஆணைகச் சட்டங்கள் அமைத்துச் சமுதாயத்தைப் பிணைத்து வைத்தலும் கடமையாகும்.

பால் கெடாதவாறு, மூடி இட்டுக் காத்தலும் வேண்டும்; அதைக் கெடுக்காதவாறு கிண்ணத்தைத் தூய்மையானதாக அமைத்தலும் வேண்டும். 'இதுதான் வேண்டும்; அது வேண்டாம்' என்று முரண்படுவதால் போராட்டம் தான் மிஞ்சும்; பயன் விளையாது!

—'முரசொலி'

அனுபவ மொழிகள்

'Unto this Last' என்ற நூலின்மூலம், நான் தெரிந்து கொண்ட படிப்பினை வருமாறு:

1. தனி மனிதனின் நன்மை, அனைவரது நல்வாழ்விலும் அடங்கியிருக்கிறது.

2. ஒரு வழக்கறிஞரின் தொழிலும், ஒரு நாவிதரின் தொழிலும் ஒரே மதிப்பு வாய்ந்தவையே. ஏனென்றால், எல்லோரும், தங்கள், தங்கள் தொழிலின் மூலம் ஊதியம் பெற்று, வாழ்க்கை நடத்தும் சம உரிமை பெற்றுள்ளனர்.

3. உழைத்து வாழ்கின்ற வாழ்க்கை, அதாவது, நிலத்தை உழுபவர், தொழில் செய்பவர் ஆகியோர் வாழ்க்கையே, வாழத் தகுந்த வாழ்வாகும்.

இம்மூன்று கருத்துக்களில் முதல் விஷயம், எனக்குத் தெரிந்ததே. இரண்டாவது, ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. மூன்றுவதோ, என்றுமே நான் எண்ணிப் பார்த்தது இல்லை. இரண்டாவது கருத்தும், மூன்றுவது கருத்தும், முதல் கருத்திலேயே அடங்கியுள்ளன என்பதை, அந்த நூல் உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெளிவாக உணர்த்திற்று.

—காந்தியடிகள்

கட்ச் எல்லைத் 'தகராறு' தோன்றிய வரலாறு

குஜராத் ராஜ்யத்திலுள்ள கட்ச் ஜில்லாவின் வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் சுமார் 9000 சதுர மைல் நிலப்பரப்பு கொண்டது கட்சின் ரண்பகுதி. இப் பகுதி பாகிஸ்தான் சிந்து மாகாண எல்லையில் இருக்கிறது. வருடத்தில் பல மாதங்கள் இப் பிரதேசத்தின் பெரும்பகுதிகள் ஜலத்தில் மூழ்கக்கூடியவை.

கட்ச் ரண் முழுவதும் கட்சின் பகுதி என்பதை டில்லி அரசாங்கம் (பிரிட்டிஷ் சர்க்கார்) எப்பொழுதும் அங்கீகரித்து வந்துள்ளது.

கட்ச்—சிந்து எல்லை 45 மைல் நீளத்துக்குத் தரையில்வரையறுக்கப்பட்டுள்ளது. ரண்—சிந்து உள்பட மற்ற எல்லைகள் சர்வே செய்யப்பட்டு, அதிகார பூர்வமான தேசப்படங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ரண் பற்றிய எல்லா சந்தேகங்களும் பம்பாய் சர்க்காரின் (சிந்து அதன் ஒரு பாகமாக இருந்தது) 1914ஆம் வருடத்திய தீர்மானத்தால் முடிவாகவும், அதிகார பூர்வமாகவும் தீர்க்கப்பட்டு விட்டன. அதன்படி கட்சின் ரண், கட்ச் சமஸ்தானத்தின்பாகமாகத் திட்டவட்டமாக ஏற்கப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு சிந்து மன்னர் கட்ச் ரண் மீது பேராசை கொண்டார். 1947—ல் பாகிஸ்தான் ஏற்பட்டபோது அந்தப் பேராசை பாகிஸ்தான் சர்க்காரையும் பற்றிக் கொண்டதாகத் தோன்றுகிறது. இந்த விசித்திர வாதத்தைப் பின்பற்றுவதாக இருந்தால், விசித்திரமான முடிவுகள் ஏற்படும். உதாரணமாக முன்பு ஒரு காலத்தில் காபூலை மகாராஜா ரஞ்சித்சிங் கைப்பற்றியதால், அதைக் காரணம் காட்டி காபூல்மீது பாகிஸ்தான் பாத்யதை கொண்டாடலாம். அல்லது புஷ்பபுரியில் (தற்போதுள்ள பெஷாவர்) அரசாண்ட கனிஷ்கர் அனேகமாக மத்திய ஆசியா முழுவதிலும் ஆட்சி செலுத்தியதால் மத்திய ஆசியா முழுவதன்மீதும் பாகிஸ்தான் பாத்யதை கொண்டாடலாம்.

பாக். உபாயம்

பாகிஸ்தான் மேற்கொள்ளும் உபாயம் அதற்கு ஏற்கனவே பழக்கப்பட்டது. காஷ்மீர் விஷயத்தில் அதன் தந்திரங்களைக் காணலாம். திருட்டுத்தனமாக

பிரிட்டிஷ் காலத்திலேயே முடிவு கண்ட விவகாரம்.

ஒரு பகுதியைக் கைப்பற்றி, காரியாம்சத்தில் அது தன்னிடம் இருப்பதாக பாத்யதை கொண்டாடுவது அதன் உபாயமாக இருக்கிறது.

இடையூறுகள்

ரணின் வடக்குப் பகுதியில் உள்ள "சாட்பெட்" என்னும் பிரதேசத்தில் 1956-ல் முதலில் இந்த உபாயத்தை பாகிஸ்தான் சோதித்துப் பார்த்தது. அப்பகுதியில் அது திருட்டுத்தனமாக ஊடுருவி, படைநிலைகளை அமைத்தது. அப்பகுதிக்குச் சென்ற இந்திய ரோந்து கோஷ்டிமீது பாகிஸ்தான் துருப்புகள் சுட்டன. ஒரு வாரத்துக்குப் பிறகு அப்பகுதிக்கு இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டபோது, ஊடுருவிய பாகிஸ்தானிகள் தாங்கள் இருந்ததற்குத் தடயம் ஏதும்வைக்காமல் சந்தடியின்றிச் சென்றுவிட்டது தெரிந்தது. ஆனால் பிறகு ஆட்சேபக் குறிப்புகளை அனுப்பி சாட்பெட்மீது தன் பாத்யதையை நிலைநாட்ட பாகிஸ்தான் முயற்சித்தது. ஆனால் அவற்றை இந்தியா உறுதியாக நிராகரித்து விட்டது.

ரணை கைப்பற்றும் முயற்சி பலிக்காததால், மேற்குப் பகுதியில் இந்தியா பாகிஸ்தான் எல்லை வரையறுப்பு வேலை பூர்த்தியாகாமல் இடையூறு செய்யும் தந்திரத்தை மேற்கொண்டு அதே லட்சியத்தை அடைய பாகிஸ்தான் முயற்சித்தது. இந்தியா, மேற்கு பாகிஸ்தான் எல்லை வரையறுப்பு வேலையை உயர் முன்னுரிமையுடன் இந்தியா பாகிஸ்தான் மத்ய சர்வே இலாகாக்கள் மேற்கொண்டன. அதன்படி பஞ்சாப்—மேற்கு பாகிஸ்தான் எல்லை வரையறுப்பு பூர்த்தி செய்யப்பட்டது. அடுத்த வேலை குஜராத் மேற்கு பாகிஸ்தான் எல்லை வரையறுப்பு இந்தியா பல தடவை வேண்டுகோள் விடுத்தபோதிலும் அந்தப் பணியை மேற்கொள்வதை பாகிஸ்தான் அனுமதிக்கவில்லை.

பதில் இல்லை

ராஜஸ்தான் மேற்கு பாகிஸ்தான் எல்லை வரையறுப்பின் இறுதி கட்டம் 1963 செப்டம்பரில் பூர்த்தியாகியது. இனி குஜராத்—மேற்கு பாகிஸ்தான் எல்லையில் வேலையை ஆரம்பிக்கவேண்டும். இப்பணிக்குத் திட்டமிட பாகிஸ்தான் சர்வே இலாகா தொடர்பு கொண்டது. பல தடவை பாகிஸ்தானுக்கு நினைவு படுத்தப் பட்டது. தந்திகளும் அனுப்பப்பட்டன. ஆனால் பாக் சர்வே இலாகா இன்னும் பதில் அனுப்பவில்லை.

இந்த விஷயத்தை 1960ல் இந்தியா-பாகிஸ்தான் மந்திரிகள் மகாநாடு கவனித்து இந்த எல்லை சம்பந்தமாக மேற்கொண்டு புள்ளி விவரம் சேகரிக்க ஒப்புக்கொண்டது. இந்த விஷயத்தில் இந்தியாவின் நிலையை 1960 ஆகஸ்ட் 12ம் தேதி லோக சபையில் பிரதமர் நேரு உறுதியாகத் தெரிவித்தார். "நாம் சம்பந்தப்பட்டவரை தகராறு ஏதும் இல்லை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு

முன்பு ஏதோ பேச்சிருந்தது. இந்த விஷயத்தை பாகிஸ்தான் எழுப்பியது. ஆனால் தகராறு ஏதும் இல்லை என நாம் கருதுகி றோம்'' என்று திரு.நேருகூறினார்.

ரணின் பல்வேறு பகுதிகளில் நோட்டம் பார்க்கும் நடவடிக் கையை மேற்கொள்ள பாகிஸ் தான் திட்டமிட்டது தெளிவு. இரண்டாம் முயற்சிக்கு 1964 மே மாதத்தில் கஞ்சர் கோட் தெரிந் தெடுக்கப்பட்டதாகத் தோன்றுகி றது. கஞ்சர் கோட்டுக்கு 3 கிலோ மீட்டர் தூரத்தில் மூன்று பாகிஸ்தானிகள் கைது செய்யப் பட்டனர். தீவனம் சேகரிக்க அவர்கள் முயற்சித்ததாகத் தோன் றியது. பீரங்கிகளைக் கொண்டு சுடுவதாக பாகிஸ்தான் எல்லைப் போலீஸ் மிரட்டியது.

1964 மே மாதம் நடந்த கூட் டத்தில் கஞ்சர் கோட் தெளிவாக இந்தியப் பிரதேசம் என்பதை பிரிவினைக்கு முந்தைய படங்கள் காட்டுவதாக பாகிஸ்தான் அதி காரிகளிடம் இந்திய எல்லை அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

தங்கள் செல்லத்தகாத கோரிக் கையை மீண்டும் வற்புறுத்த கஞ்சர் கோட்டை பாகிஸ்தானி கள் தெரிந்தெடுத்ததாகத் தோன் றியசந்தேகத்தை இச்சம்பவம் ஊர்ஜிதம் செய்தது. அதன்பேரில் எல்லைவரை இந்திய எல்லைப் போலீஸ் தீவிரமாக ரோந்து சுற்றியது.

பாக். பாதை அமைத்தது

பிரதேசம் முழுவதிலும் இந் திய எல்லைப் போலீஸ் ரோந்து புரிவதைப்பற்றி 1965 ஜனவரி 22-ம் தேதி பாகிஸ்தான் எல்லைப் போலீஸ் புகார் கூற ஆரம்பித் தது. அதையடுத்து கஞ்சர்கோட் பகுதியில் பாகிஸ்தான் துருப்பு கள் ஊடுருவின. இந்தியப் பிர தேசத்தில், சுமார் 18 மைல் நீள முள்ள கிழக்கு-மேற்காகச் செல் லும் புதிய பாதையை பாகிஸ் தான் அமைத்தது, மூன்று நாட் களுக்குப் பிறகு தெரிந்தது. எல்லைக்கு சுமார் 1300 கெஜம் தெற்கில் உள்ள கஞ்சர்கோட் கோட்டையையும் பாகிஸ்தான் கைப்பற்றியது. இந்தியா தாக்கல் செய்த ஆட்சேபங்களுக்கு பாகிஸ் தானிடமிருந்து உடனடியாக பதில் வரவில்லை. எல்லை வரை யறுப்பு வேலையில் சர்வே அதி காரிகள் ஈடுபடுவதையும் பாகிஸ் தான் அனுமதிக்கவில்லை.

இவ்வாறு பிரச்னை இல்லாத இடத்தில் மற்றொரு எல்லைப் பிரச்னையை பாகிஸ்தான் சிருஷ் டித்துள்ளது. இந்தியாவின் பிரி வினைக்கு முன்பாகவே இப்பொ ழுது பாகிஸ்தானின் பாகமான சிந்து மாகாணம் இப்பொழுது குஜராத்தில் உள்ள கட்ச் சமஸ் தானம் ஆகியவற்றின் எல்லைகள் தெளிவாக இருந்தன. இந்திய பிரிவினையால் அந்த எல்லை மாற் றப்படவில்லை. இந்திய சர்வே யர் ஜெனரல் வெளியிட்ட பிரி வினைக்கு முந்தைய தேசப் படங் களில் இந்த எல்லை தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தியா வின் மத்திய, ராஜ்ய சர்க்கார்

அதிகாரிகள் இப்பகுதியில் அதிகாரம் செலுத்தியுள்ளனர். எல்லை வரை அப்பகுதியில் இந்திய எல்லைப் போலீசார் ரோந்து புரிந்து வந்துள்ளனர். பாகிஸ்தானின் ஊடுருவலும், பாதை அமைப்பும் இந்தியப் பிரதேசத்தில் உள்ள கஞ்சர் கோட்டிலும், அதற்கு மேற்கில் மற்றொரு இடத்திலும் அது படைநிலைகளை அமைத்ததும் 1965 ஜனவரிக்குப் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் கஞ்சர் கோட் எல்லைக்கு 1300 கெஜம் தெற்கிலும், மற்றப் படைநிலை 2000 கெஜம் தெற்கிலும் உள்ளன.

மண்ணாசை

பிப்ரவரி 12, பிப்ரவரி 18, மார்ச் 11 ஆகிய தேதிகளில் இந்திய சர்க்கார் அனுப்பிய ஆட்சேபக் குறிப்புகளில் இந்த ஊடுருவல்களை பாகிஸ்தான் அருப்புகள் நீக்கி, பழைய நிலையை ஏற்படுத்த வேண்டும் என அது கேட்டுக் கொண்டது. இரு தரப்பு எல்லை அதிகாரிகள் சந்திக்க வேண்டும் என்றும் இந்திய சர்க்கார் யோசனை கூறியது. இந்திய, பாகிஸ்தான் சர்வேயர் ஜெனரல்கள் சந்திக்க வேண்டும் என்ற மூன்றாவது யோசனையை நீண்ட காலத்துக்கு முன்பாகவே இந்தியா தெரிவித்தது.

இவற்றை பாகிஸ்தான் இன்னும் ஏற்கவில்லை. அதற்கு மாறாக அப்பகுதியில் தன் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணையாக எல்லையில் பாகிஸ்தான் படைகளைக் குவித்துள்ளது. கட்ச் ரணின் பாதியைக் கேட்கும் பாகிஸ்தானின் கோரிக்கை அதன் மண்ணாசைக்கு மற்றொரு சான்று.

உருவாகி விட்டது !

விற்பனைக்குத தயார் !!

RECORD SHEET IN TAMIL

மாணவர் குறிப்பேடு

100 காப்பிகளுக்குரிய விலை (தபால் சார்ஜ் உட்பட) ரூ. 4
(மாதிரிக்கு கடிதம் எழுதவும்)

விவரங்கட்கு

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை—1.

PROCEEDINGS OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTIONS, MADRAS.

Station: MADRAS—6. Rc. No. 687 B. I/65 Dated: 29-4-1965.

Present :—Sri. N. D. SUNDARAVADIVELU, M. A., L. T.,
(*Director of Public Instruction, Madras-6.*)

Sub: Education - Secondary - Revised Pattern of School Education - *Introduction during 1965-66.*

Ref: G. O. Ms. No. 883. Education, dated 25—4—1963.

In their order cited, Government have revised the pattern of school education and laid down that the school course in this State will consist of *an integrated course of eleven years covering* Standards I to XI which is to be designated as follows :—

Standard	I	to	V	—— Primary
	VI	to	VIII	—— Upper Primary
	IX	to	XI	—— Secondary

The syllabus for Standards I to V in all the Subjects under the revised pattern is materially the same as the existing (1959 Scheme) Syllabus for the same Standards except in regard to (Social Studies) which has been spilt up into 'History' and 'Geography' under the revised pattern.

The distribution of periods under the Revised pattern of School Education for Standards I to V, are as shown below :

	Distribution of Periods.				
	Standard I	Std. II	Std. III	Std. IV	Std. V.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
Elementary Schools - 220 Total number of working days in a year:					
1. *Regional Language*	10	10	10	18	18
2. Elementary Mathematics	6	6	6	6	6
3. Elementary Science (a)	4	4	4	4	4
4. (a) History	2	2	2	2	2
(b) Geography	2	3	2	2	2
5. Physical Training and Citizenshipi	3	3	3	3	2
6. Arts and Crafts	7	7	7	4	4
7. *Moral Instruction*	1	1	2	1	1
8. English			(a)	5	6

Nature Study and gardening in the Lower Classes I to IV.

(a) English taught every day for 20 minutes during the period allotted for "Arts and Crafts."

The syllabus under the revised Pattern of school education for Standards I to V, which is materially the same as the existing syllabus under the 1959 scheme, will be introduced simutaneously in all the five Standards I to V in all Schools of this State from 1965-66.

The Printed copies of the new syllabus will be made available in due course. In the meantime the following instructions are issued:

Regional Language other than Tamil: Standards I to V:

The syllabus is the same as existing one and there fore books in the approved list may be used.

Tamil - Standards I to V.

The text books prescribed by the Department for Standards I to V should be used.

English - Standards III to V.

The syllabus is the same as the existing one, and hence the existing books published by the Departmente are to be continued.

Mathematics and Science - Standard III to V.

The syllabus is virtually the same as the present one, and books, in the approved list are to be used.

History and Geography - Standards IV and V.

In the new scheme, History and Geography as two separate subjects, will replace Social Studies under the present syllabus. The syllabus for these two separate subjects cover the existinq syllabus for social studies except for a few topical changes.

For Standards I to III no books are prescribed under the existing syllabus, and likewise no books should be used under the new syllabus. For Standards IV and V, in as much as the existing books in the approved list cover most of the topics now adopted for History and Geography separately, they may be used, and whereever necessary teachers may supplement.

மாதிரி உயர்நிலைப் பள்ளி நிறுவுவது பற்றிப் பரிசீலனை பக்தவத்சலம் தகவல்

சென்னை, எப். 21—ஜில்லா தலைநகரம் ஒவ்வொன்றிலும் ஒரு மாதிரி உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தும் திட்டமொன்று சென்னை சர்க்காரின் பரிசீலனையில் உள்ளது.

இத் திட்டத்தின் விவரங்கள் இனி தயாரிக்கப்பட வேண்டும் என்று முதன் மந்திரி திரு பக்தவத்சலம் இன்று இங்கு தெரிவித்தார். சாத்யமான அளவு உயர்ந்த தரமுள்ளதாக இம்மாதிரி பள்ளிகள் இருக்கும். ஜில்லாவிலுள்ள இதர உயர்நிலைப் பள்ளிகளுக்கு இது முன் மாதிரியாக விளங்கும். உத்தேச மாதிரி பள்ளிகள் சம்பளம் வசூலிக்கலாம். பாடங்களில் தமிழில் போதிக்கப்படும் என்று திரு. பக்தவத்சலம் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்த கல்வி ஆண்டிலிருந்தே உத்தேச மாதிரி பள்ளிகள் இயங்க வேண்டுமா அல்லது பின்னர் இவற்றை நிறுவலாமா என்பது பற்றியும் ராஜ்ய சர்க்கார் பரிசீலித்து வருகிறது.

இது குறித்து ராஜ்ய சர்க்கார் அடுத்த இரு மாதங்களில் இறுதி முடிவு மேற்கொள்ளலாம்.

அறிவியல் :

பாராட்டும் பண்பு

ஜே. ஜே. துரைராஜ் பி.ஏ., எல்.டி.

மற்றவர்களால் நன்கு மதிக்கப்பட வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவருடைய இருதயத்தின் ஆழத்திலும் அழுந்திக் கிடக்கிறது என்று சொல்லலாம். உல்லியம் ஜேம்ஸ் என்ற பிரபல அமெரிக்க மனோதத்துவ சாஸ்திரி, ஒரு சமயம் நோய் வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாகி விட்டார். சுகம் அடைந்து, வலுப் பெற்று வருங் காலத்தில், அவர் சிநேகிதர்களில் ஒருவரிடத்திலிருந்து வந்த ஒரு செய்தி, அவர் உள்ளத்தில் ஒரு மகத்தான மாறுதலைச் செய்துவிட்டது என்று சொல்லலாம். அக் கடிதத்தின் சாராம்சம் என்னவென்றால், "நீங்கள் மனோதத்துவ சாஸ்திரத்திற்காகச் செய்து வரும் அரிய சேவையைக் குறித்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன். உங்கள் புத்தகங்கள் எனக்கும், என்னைப் போன்ற எத்தனையோ ஆயிரம் ஆயிரம் மக்களுக்கும் இன்பத்தை அளித்திருக்கின்றன. இத் தொண்டை நான் பெரிதும் மதிக்கிறேன்" என்பது தான். "என்ன இது? இக்கடிதத்தில் அப்படி ஒன்றும் விசேஷம் இல்லையே" என்று நீங்கள் நினைக்கலாம். ஆழ்ந்து யோசித்தால், இச் சாதாரண கடிதத்தின் முக்கியத்துவம் வெளிப்படும். உல்லியம் ஜேம்ஸ் அவர்களின் புத்தகங்களை வாசித்தவர்கள் லட்சக் கணக்கான பேர் என்ற போதிலும் இது வரை ஒருவராகிலும் அவரிடம் அவரைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்ளவில்லை. எனவே இக்கடிதம் வந்தவுடன், நிபுணரின் மனம் குளிர்ந்தது. மனோ தத்துவ சாஸ்திரத்தில் ஒரு புதுக்கருத்து புகுந்தது. அதாவது, மனிதன் மிகவும் அதிகமாய் விரும்பும் காரியங்களில் ஒன்று, மற்றவர்கள் தன்னை மதித்துப் பாராட்ட வேண்டும் என்பதே. ஆம், இது நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு கருத்து. ஆனால் வாழ்க்கையில் இதன் பலனை நாம் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஒரு செடியோ, மரமோ செழிப்புடன் வளர வளமான வண்டல் இருந்தால் போதாது. குறைவின்றித் தண்ணீர் இருந்தாலும் போதாது. சூரிய வெளிச்சம், காற்று, இவை இருந்தாலும் போதா. உதாரணமாக, நம் நாட்டு மாஞ் செடி ஒன்றைக் குளிர்ப்பிரதேசத்திற்கு எடுத்துக் கொண்டு போய், நல்ல நிலம், காற்று, வெளிச்சம், தண்ணீர் முதலியவை கொடுத்தால் மாத்

திரம் அது வளர்ந்து விடுகிறதா? இல்லை. சீதோஷ்ணம் என்னும் சூழ் நிலையும் ஏற்றதாய் இருக்க வேண்டும். இது அத்தியாவசியம். எனவே தான் குளிர்ப் பிரதேசத்தின் மரங்கள் நமது நாட்டில் சரியாய் வளருவதில்லை. அவ்வண்ணமே நமது நாட்டுச் செடிகளும் வேறு நாடுகளில் அதாவது, சீதோஷ்ண நிலை வித்தியாசமாக இருக்கும் நாடுகளில் செழிப்பதில்லை.

கடந்த யுத்தத்தில் சிக்கித் தவித்த மக்களை விடுவித்த பெருமையும் புகழும் பெரிதும் சர்ச்சிலைச் சாரும். அவர் என்றும் அழியாப் புகழை எய்தி விட்டார் என்பதற்கு, அவர் சமீபகாலத்திற்கு முன் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பியதை மக்களுக்கு அறிவித்தபோது, பத்திரிகை உலகம் அவருக்குக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரங்களை சான்று.

அப்படிப் பட்ட யுத்தம் நேர்ந்திராவிட்டால் அப்படிப்பட்ட மனுஷன் உருவாயிருக்க மாட்டார் என்பது திண்ணம். மனிதனுடன் சூழ் நிலையும் பிணையும் போது, அவன் தனிச்சிறப்புற்ற பிறவியாகிறான். பெரிய மனிதர்களுக்கு இத்தகைய சூழ் நிலையை உலகச் சம்பவங்களை சிருஷ்டித்துக் கொடுக்கின்றன.

எனினும் உலகத்தில் தோன்றுகிற ஒவ்வொரு மனிதனுக்கும் சாதகமான ஒரு சூழ்நிலை இருக்கத்தான் செய்கிறது. அதுதான், அவன்பால் மற்றவர்கள் கொள்ளும் நல் மதிப்பு அல்லது நல்லெண்ணம். இதற்குத் தகுந்தபடியே, அவன் வாழ்க்கையின் தரம் பொலிவுபெறும். இயேசுவானவரின் சிறு பிராயத்தைச் சுவிசேடன் வர்ணிக்கும் போது, "அவர் ஞானத்திலும் வளர்த்தியிலும், அதிகரித்து....மனுஷருக்குப் பிரியராக மேன்மேலும் வளர்ந்து வந்தார்" என்று குறிப்பிடுகிறார். இயேசு என்னும் பாலகன் தம் நற்குணத்தாலும் நற்செய்கையாலும் மற்றவர்களுடைய நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டார் என்பது தெளிவாகிறது அல்லவா? ஆம். நம் வாழ்க்கை சுவைக்க வேண்டும் என்றால், நம் வீட்டிலுள்ளோர் நம்மைப் பற்றி நல் மதிப்புக்கொள்ளவேண்டியது அவசியம். நமது தெருவில் இருப்போர், நம்முடன் வேலை செய்கிறவர்கள், உற்றார், உறவினர், இவர்கள் நம்மைக் குறித்துச் சேகரித்து வைத்திருக்கும் எண்ணங்கள் நமக்குச் சாதகமாகவோ பாதக மாகவோ அணிவகுத்து நிற்கின்றன என்பதை என்றும் மறக்கலாகாது.

அநேக ஆண்டுகளாக ஒரு பாதிரியார், ஒரு சபையில் வேலை செய்து வந்தார். மிகவும் சிரமப் பட்டுத் தம் பிரசங்கங்களைத் தயார் செய்வார். திறமையுடன் போதிக்கும் வன்மையுடையவர். சலியா உழைப்பாளி. தமது சபையாருக்காக உழைத்துத் துரும்பாகிக்கொண்டே போனார். ஆனால் அவர் வாழ்க்கையில் தெம்பில்லை. உற்சாகத்தால் ஏற்படக்

கூடிய சந்தோஷம் அவர் வதனத்தில் தோன்றவில்லை. சோர்வும் களைப்பும் அவர் முகத்தை ஆக்ரமித்துக்கொண்டன. எனினும் பாதிரியார் தம் கடமையைச் செவ்வனவே செய்து வந்தார்.

அவர் இறந்தபோது, ஊரார் பட்ட துயரம் கொஞ்சமல்ல. பிரேதத்தைச் சுற்றி நின்று அழுது கொண்டிருந்தார்கள். அவர் மனைவி துக்கமே உருவெடுத்தாற்போல் தோற்றம் அளித்தாள். பாதிரியாரின் அகாலமரணத்தின் காரணம் எதுவென்று அவளுக்குத் தெரிந்திருந்தது போலும். அந்த ஜனக்கூட்டத்தில் ஒருவர் மெதுவாக நகர்ந்து வந்து, அந்த அம்மாள் பக்கத்தில் நின்றுகொண்டு, "அம்மா, உங்கள் கணவரின் பிரசங்கங்களை நாங்கள் வெகுவாக ரசித்தோம். அவை எங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தன" என்றார். மனைவியின் கண்களில் கசிந்து நின்ற கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டினது. "அப்படியா? இதை ஏன் நீங்கள் அவர் உயிருடனிருந்த காலத்தில் அவரிடத்தில் சொல்லியிருக்கக் கூடாது? நீங்கள் அவருடைய பிரசங்கங்களை மதிக்கிறீர்கள் என்று அவருக்குத் தெரிந்திருந்தால், இந்த அகால மரணம் அவருக்கு ஏற்பட்டிருக்காது" என்றாள்.

பாதிரியாரைக் கொன்றவர்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்வுற்ற ரசிகர்கள் தாம் என்று சொன்னால் பொய்யாகாது. அவர்கள் வாள் நீட்டி அவருடைய வாழ் நாளைக் குறைக்கவில்லை. கையைக் கொண்டு அவரை அடிக்கவில்லை. துப்பாக்கியால் துன்புறுத்தவில்லை. உதடுகளை இறுக மூடி, மௌனம் சாதித்து, பெருங் கொலை செய்தனர். பாதிரியாருக்குத் தேவையானது மக்களின் நன் மதிப்பும் நன்றியுமே. அதைத் தான் அவர்கள் கொடுக்கவில்லை. ஒருவேளை நாமும் இக் குற்றத்தைத் தான் ஒவ்வொரு நாளும் செய்து வரலாம். யோசித்துப் பார்ப்போம். நேற்று நீங்கள் ஆலயத்தில் கேட்ட பிரசங்கம் நன்றாய் இருந்ததா? அப்படியானால், கோயில் முடிந்தவுடன், சற்றுக் காத்திருந்து, பிரசங்கியாரைக் கண்டு முக மலர்ச்சியுடன் "ஐயா, உங்கள் பிரசங்கம் மிகவும் நன்றாய் இருந்தது. நன்றி" என்று சொன்னீர்களா? இப்பத்திரிகையிலுள்ள ஒரு கட்டுரை உங்கள் மனத்தைக் கவர்ந்ததா? அதில் சொல்லப்பட்ட விஷயங்கள் உங்கள் வாழ்க்கையில் பயன்பட்டனவா? அப்படியானால், அதைப் பாராட்டி, ஆசிரியருக்கு ஏன் நீங்கள் ஒரு வரி எழுதக்கூடாது?

இப்பழக்கம் முகஸ்துதியை ஒத்ததாகும் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. முகஸ்துதியின் அஸ்திவாரம் பொய். அதைக் கையாள்வோர் தன்னலத்திற்கென்று அப்படிச் செய்கிறார்கள். பிரதி பலன் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அது பிரயோஜனப்படுத்தப் படுகிறது.

ஆனால் ஒருவன் தன் நன் மதிப்பையும் பாராட்டையும் தெரிவிக்கும்போது, அவன் மனத்தில் தன்னலம் அல்ல, நன்றியே மிளிர்கிறது. அதை அடக்கி வைக்க முடியாமல் வெளியிடுகிறான். அப்போது அது மற்றவர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது. இதுவே ஒரு ஆத்மா மற்றொரு ஆத்மாவுக்குச் செய்யும் கடமையாகும்.

காலையில் வீட்டை விட்டுக் கிளம்பின கணவன் எட்டு மணி நேரம் அலுவலகத்திலிருந்து விட்டு, களைப்புடன் வீடு திரும்புகிறான். அங்குக் காணும் காட்சி என்ன? நீண்ட முகத்துடனும், கோத்து வாராத கோதையுடனும் அவன் மனைவி அவனை வரவேற்று (?) தனது பல்லவியை ஆரம்பித்து விடுகிறாள்: "காலை எட்டு மணியாயிற்று வேலைக்காரன் வந்து சேர," "காய் கறி வாங்கப் போன வேலைக்காரி முற்றலாக வாங்கி வந்து விட்டாள்." "அவிழ்த்துவிட்ட கன்றுக்குட்டி இன்னும் வீடு வந்து சேரவில்லை." "பிள்ளை கீழே தள்ளி விட்டு, அவுன்ஸ் கிளாஸ் உடைந்து விட்டது." "தையற்காரன் இரண்டு தரம் வந்து விட்டுப் போனான்," "சுவர்க் கடிகாரம் சாவி கொடுக்காமல் நின்று போய் விட்டது." இப்படி ஆரம்பித்தால், யாருக்குத்தான் கோபம் வராமலிருக்க முடியும்?

இதற்குப் பதிலாக, பத்தினி முல்லைச் சிரிப்புடனும், வாரிவிட்ட கூந்தலுடனும் புருடன் முன் காட்சி யளித்து, "வாருங்கள்! வாருங்கள்! ஏது, இன்றைக்கு அதிக நேரமாகி விட்டது போலிருக்கிறதே!" என்று ஆரம்பித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மானேஜர் திட்டின வசவு மொழிகளையும், பியூன் கொடுத்த தொந்தரவையும், ஏன், வீடுதிரும்புகையில், பஸ்ஸில் தொங்கிக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட வலியையும் கூட பர்த்தா மறந்து விடுவார்."

சில கணவர்கள் வீடு திரும்பும் போதே, சுடு மூஞ்சியுடன் வருவார்கள். பக்கத்தில் இருக்கும் மேசையின் மீது, கொண்டு வந்த பைல்களைப் பொத்தென்று போட்டுவிட்டு நாசுக்கற்ற முறையில் நாற்காலியில் உட்காருவார்கள். காப்பி வர அரை நிமிஷம் பிந்திவிட்டால், கேட்கவேண்டுமே அவர்கள் கோபத்தை! எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன், வசை வார்த்தைகளைச் சுடச் சுடப் பொரிந்து தள்ளுவார்கள்.

சில நிமிஷங்களுக்குள் வீடு போர்க்களமாகிவிடும். உள்ளங்கள் உவகையை இழந்துவிடும்.

ஒரு மனைவி தன் புருஷன் தனக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் அன்றாடம் செய்து வரும் வேலையை நன்கு மதிக்கிறவளாய் இருந்தால், அவன் மனத்தைப் புண்படுத்துவாளா? ஒருபுருஷன் தன் மனைவி தனக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் அனுதினம் செய்து வரும் தியாகத்தை நன்கு

(15ஆம் பக்கம் பார்க்க)

உலகம் பொல்லாதது!

[மா. கி. தசரதன், எம்.ஏ.]

உலகம் பொல்லாதது! சொல்லாதவர் யார்? ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேளையில் இந்த உலகத்தைப் பொல்லாத உலகம் என்று பழித்திருக்கிறோம். உலகம் முழுவதையும் சுற்றிப்பார்த்துவிட்டு, இதிலே உள்ள மலை உயரம் போதாது, ஆறு நீளம் போதாது, கடல் நீரில் உப்பு போதாது, மண்ணிலே வளம் காணாது என்று அளந்து பார்த்துவிட்டு அப்புறம் இந்த உலகம் பொல்லாதது என்று சொல்லவில்லை. இருந்த இடத்தில் இருந்துகொண்டு, உலகத்தின் ஒரு மூலையை மட்டும் பார்த்துவிட்டு உலகம் பொல்லாதது என்று சொல்லி விடுகிறோம். கத்தரிக்காயைப் பார்த்து நன்றாக இல்லை என்று சொல்வது மாதிரி, உலகம் பொல்லாதது என்று சொல்லுகிறோம். கத்தரிக்காயைக் கூட முறறல், புழுத்தல் இருக்கிற பகுதியைச் சீவித் தள்ளிவிட்டு மற்ற பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் இத்தனை பெரிய உலகத்தில் ஒரு அளியைப் பார்த்துவிட்டு பொல்லாதது என்கிறோம்; உலகமும் அதை எற்றுக்கொள்வதுபோல் சும்மாவே இருக்கிறது. பதில் பேசமுடியாததால் உலகம் சும்மா இருக்கிறதா? இல்லை! உலகம் நினைத்தால் பேசும்! ஆனால் உலகத்திறகுத் தெரியும், உலகம் பொல்லாதது என்னும்போது நாம் உலகத்தைச் சொல்லவில்லை, அதிலே உள்ள மக்களைச் சொல்கிறோம் என்பது! "நீ இப்படியெல்லாம் நடந்து கொள்வதைப் பார்த்து ஊர் சிரிக்கிறது" என்று சொல்லும்போது ஊரில் உள்ள மக்கள்தாம் சிரிக்கிறார்களே தவிர, ஊர் சிரிப்பது இல்லை என்பது நமக்கு எப்படித் தெரிகிறதோ, அதைப்போல, உலகம் பொல்லாதது என்னும்போது, தன்னைச் சொல்லவில்லை, தன்னிலே இருக்கும் மக்களைத்தான் சொல்கிறார்கள் என்பது உலகத்திற்குத் தெரியாதா என்ன? எவ்வளவு வயது ஆகிறது உலகத்திற்கு, இந்த அநுபவ அறிவு கூடவா இல்லாது போகும்?

தெருவிலே முள்ளங்கி விற்பவனைக் கூப்பிடுவதற்கு, "ஏ முள்ளங்கி" என்கிறோம். அவனும் திரும்பிப் பார்த்து, "இதோ வந்தேன்", என்கிறானே தவிர, "என்னையா இது அக்ரமம்? எனக்குப் பெயர் இருக்கிறது முத்தன் என்று அழகாக. அதை விட்டுவிட்டு முள்ளங்கி என்று கூப்பிடுகிறாயே நியாயமா?" என்று சண்டைக்கு நிற்கவில்லை. அவன் பெயர் முத்தனாக இருந்தாலும், முள்ளங்கிக் கூடை தலையிலே இருக்கும்போது அவன் முள்ளங்கியாகிறான். கூடையை

இறக்கி வைத்துவிட்ட பிறகு அவனை நாமும் முள்ளங்கி என்று கூப்பிடப்போவது இல்லை; கூப்பிட்டாலும் அவன் திரும்பிப் பார்க்கமாட்டான்.

தமிழ் இலக்கண ஆசிரியரைக் கேட்டால், "இதுதான் ஆகு பெயர்" என்பார். ஆகு பெயரா, அதென்ன ஆகுபெயர், ஆகாப் பெயர் என்று திகைத்தால், அவரே விளக்கம் சொல்வார். ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய ஒன்றனுக்கு ஆகி வருவது ஆகுபெயர் என்பார். ஒரு பொருளின் பெயரை இன்னொன்றுக்கு எத்தனையோ வகையில் சொல்கிறோம். விளக்கு என்றால் எரிகின்ற சுடருக்குத் தான் பொருள்; அதைத்தான் குறிக்கும். ஆனால் விளக்கு ஒடிந்தது என்னும்போது எரிகின்ற சுடர் (ஜோதி) ஒடிந்தது—என்றல்ல பொருள், அந்தச் சுடரைத் தாங்கிக்கொண்டிருக்கும் தண்டு (விளக்கின் தண்டு) ஒடிந்தது என்பது பொருளாகிறது. இப்படி எத்தனையோ, ஆகுபெயர்களை நாம் தெரிந்தும் தெரியாமலும் (பெயர் தெரியாமலே) சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றுதான் உலகம் பொல்லாதது என்பதும்.

நேற்று பொல்லாதது என்ற உலகத்தை இன்று நல்லது என்று பாராட்டுவோம். ஒரே நேரத்தில் இரண்டு விதமான கருத்துக்களையும் கூறுவதுகூட உண்டு.

எனக்கு நல்லதாக இருக்கும் ஒன்று, இன்னொருவருக்குத் தீயதாகிறது. பாகற்காயைக் கசப்பு என்று நான் உண்பது இல்லை. ஆனால் காய்கறிகளில் உள்ள சத்துபற்றியும் மருந்துத் தன்மை பற்றியும் அறிந்த ஒருவர் அதை விடுவது இல்லை. தமிழ்ப்பற்று இருக்கிற ஒருவரிடம் 'இந்தி வருகிறதே' என்றால் அவர் குமைகின்றார். என்ன செய்வது என்று தெரியவில்லையே என்கிறார். தாய் மொழிக்கு ஆபத்து வருமே என்ற கவலையில் மனம் உடைந்து போகிறார். மொழியாவது மண்ணாவது, எல்லாம் பிழைக்கிற வழியில் இருக்கிறது என்று நினைக்கும் ஒருவரிடம் இந்தி வருகிறது என்றால், ஆமாம் சனவரி 26 முதல் வருகிறது. தெரியுமே எனக்கு என்று, ஏதோ ரயில் வருவதைச் சொல்வதுபோல் ஒரு கவலையும் இல்லாமல் சொல்கிறார்.

நேற்று வரையில் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவியவர்கள், இன்று எட்டி எட்டி நிற்கின்றனர்; எட்டி நின்றவர்கள் இன்று கிட்டிவந்து விருந்துண்டுவிட்டு வெற்றிலை போட்டுக் குதப்பிய வண்ணம் ஊரார் குறைகளைப் பேசிக் கொண்டிருக்கின்றனர். என்ன காரணம்? நிலைமை, நினைப்புதான். இதே நிலை நாளையும் இருக்குமா, என்றால் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

உலகம் தன்னைத்தானே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது; அதே நேரத்தில் சூரியனையும் சுற்றிக்கொண்டிருக்கிறதாம். அப்படி

யானால் நேற்று இருந்த இடம் இன்று மாறலாம்; இன்று இருப்பது நாளை திரியலாம். கீழது மேலாகலாம்; மேலது கீழாகலாம். நல்லது பொல்லது ஆகலாம்; பொல்லது நல்லது ஆகலாம்.

நமது நிலையையும் பொருத்தே எதனையும் நல்லது என்றும் தீயது என்றும் கூற முடியும். கார் நல்லது தான், வசதியானது கூடத்தான். ஆனால் நம்முடைய பொருளாதார நிலை என்ன என்பதைப் பொருத்துதானே, அது நல்லதா இல்லையா என்று சொல்ல முடியும்? கையிலே நாலு காசு மிச்சமாக இருந்து வேறு செலவும் இல்லாதிருந்து கார் வைத்துக்கொண்டால் நல்லதுதான். கடன் தொல்லை கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்க, கடனுக்கு மேல் கடனாக வாங்கிக் கார் வாங்கினால் அது எப்படி நல்லதாக முடியும்?

தைலம் நல்லது என்பதற்காகத் தலைவலி இல்லாதபோதுகூட தடவிக்கொள்ள முடியுமா என்ன? என்னய்யா, தைலம் தடவிக் கொள்கிறாயே, தலைவலியா என்று கேட்டால், 'வலியும் இல்லை, ஒன்றும் இல்லை. தைலம் கிடைத்தது. அதுவும் உயர்ந்த தைலம், சும்மா கிடைத்தது தடவிக்கொள்கிறேன்' என்றால், சொல்கிறவனைப்பற்றி என்ன நினைப்போம்.

எருக்கம்பூவும், மருந்துக்குத் தேவைப்படும்போது நல்லதாகிறது; மல்லிகையும் வேண்டாத போது தீயதாகிறது.

உலகத்தில் நல்லதும் இருக்கிறது; தீயதும் இருக்கிறது. பகுத்துணர்ந்து தேவைப்படுவதைக் கொள்வதுதான் அறிவுடைமை. பகலும் இருக்கிறது, இரவும் இருக்கிறது என்பதை மறத்தற்கில்லை. ஒளியும் இருளும் இணைந்தே உள்ளன. ஒன்றை ஒன்று ஒட்டியே வருகின்றன. பகல் ஒளியைக் காணும்போது உலகமே ஒளிமயமானது என்று முடிவு கட்டிவிடக் கூடாது; அடுத்து இருள் வரும்போது வழி காட்டுவதற்குத் தேவை என அகல் விளக்கைத் தேடி வைத்துக் கொள்ள வேண்டும். நடுநிசியில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, உலகமே இருளில் கிடக்கிறது. என் வாழ்வில் எப்படி ஒளி கிடைக்கும் என்று ஒதுங்கிப் போகவும் கூடாது. விடியும் என்று நம்பி உறங்கினால், விடிகிறது.

இருளில் தோன்றும் நம்பிக்கையாகவும், இருட்டை விளக்கும் அகல் விளக்காகவும் இருந்து பயன்படுபவை சான்றோர்களின் அறவுரைகளேயாகும். உடல்தளர்ச்சிக்குக் கோல் ஊன்றிக்கொள்ள உதவுகின்றது; உள்ளத் தளர்ச்சிக்குத் துணையாவது சான்றோரின் அறிவுரைகளே ஆகும். அந்தத் தெளிவு தோன்றுமானால் உலகம் பொல்லாதது என்று தூற்றிக்கொண்டிருக்கத் தேவையில்லை.

ஒரே தெருவில் உள்ள இரண்டு வீடுகளில், ஒன்றில் சாப்பறை

கேட்கிறது; மற்றொன்றில் மண முரசு ஒலிக்கிறது. ஒரு வீட்டில் அழுகுரல் அலை அலையாக எழுகிறது; மற்றொன்றில் ஆரவார ஒலி அலையோசைபோல் கேட்கிறது.

ஒரே தெருவில், ஒரே ஊரில், ஒரே உலகத்தில் இப்படிப்பட்ட காட்சிகள் ஏராளமாக உள்ளன. இப்படிப்பட்ட நிலையில் உலகத்தின் வாழ்வு இருப்பதினால் உலகம் பொல்லாதது என்கிறோம்; ஒரு முறைக்கு ஒன்பது முறை ஓராயிரம் முறைகள் சொன்னாலும், உள்ளது உள்ளதுதான்; உலகம் பொல்லாததுதான். சொல்லிக் கொண்டிருப்பதினால் மட்டும் என்ன பயன்?

"ஐயோ, நெருப்பு, நெருப்பு" என்று கூவிக்கொண்டிருந்தால் நெருப்பு நீறாகிவிடுமா? தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி அணைத்தால்தான் நெருப்பு நீறு ஆகும். தண்ணீர் இல்லை என்றால், கொஞ்சம் தள்ளியாவது நின்றுகொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு "நெருப்பு நெருப்பு" என்று நெஞ்சுருகக் கூவுவதனால்மட்டும் என்ன பயன்? நோய் வந்துவிட்டது, வந்துவிட்டது என்றால் மட்டும போதாது. மருந்தும் உண்ண வேண்டும். அப்போதுதான் நோய் நீங்கும். இல்லையேல், நோய்த் துன்பமட்டும் அல்லாமல், நோய் நோய் என்று நொந்துகொள்ளும் துன்பமும் சேர்ந்துகொள்ளும்.

உலகம் பொல்லாததுதான். அதைப்பற்றி இனி எண்ணி என்ன செய்வது? "ஏன் பிறந்தேன்?" என்று பிறந்ததற்குப் பின் பாடி என்ன லாபம்? பிறந்தாகிவிட்டது. இனி எப்படிப் பயனுடைய வாழ்வு வாழலாம் என்று எண்ணவேண்டும்.

உலகம் பொல்லாதது. அது தெரிகிறது. தெரிந்து சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. இன்னாத இந்த உலகத்தில் இனியது காணல் வேண்டும். அதுவே செய்யத்தகுந்தது. அதை விட்டுவிட்டு உலகம் பொல்லாதது என்பதைப் பல்லவியாக்கிப் பண்ணிசைப்பதிலே பயனேதும் இல்லை.

முள் இருக்கிறது. அதைத் தள்ளித்தான் ரோசாவைக் கொள்ள வேண்டும்; உமி இருக்கிறது. அதை நீக்கித்தான் அரிசியைக் கொள்ளவேண்டும். துன்பம் இருக்கிறது, அதற்கிடையில் தான் இன்பத்தைக் காணவேண்டும்.

இந்த உண்மைகளை, **பக்குடுக்கை நன்கணியார்** என்னும் புலவர் அழகாகச் சொல்கிறார், புறநானூறு நூற்றுத் தொண்ணூற்று நாலாம் பாட்டில். பாட்டு என்னமோ சின்னதுதான். புலவருடைய பெயர்கூட ஒன்றும் அறிமுகம் ஆன பெயராக இல்லை. ஆனால் அவர் கூறியுள்ள கருத்தோ, மிகப் பெரியது; ஆழமுள்ளது; என்றும் வாழ்வது.

—"காஞ்சி"

எமது
வெளியீடுகள்

ஆரம்ப, உயர்தரப் பாடசாலைகளுக்கு
உயர் நிலைப்பள்ளிகளுக்கு

1965

"ஆரம்பக்கல்வி" இனும்!

ரூ. 100–க்கு குறையாமல் எமது பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக் கல்வி" மாதப் பத்திரிகை இனுமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப் படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹவுஸ
("ஆரம்பக் கல்வி" நிலையம்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.
தபால் பெட்டி எண் 1818. டெலிபோன் எண் : 24544.

ஆரம்பப்பள்ளிகளுக்கு :

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M.A.,L.T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1·25	25	10-5-'61

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்.

ஆறும் வகுப்பு	0·75	4	16-5-'62

சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர் : பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·50	...	...
மூன்றும் வகுப்பு	0·75	43	13-5-'59
நான்காம் வகுப்பு	0·87	25	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1·25	59	15-5-'60

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B.A., L.T.

ஆறும் வகுப்பு	1·50	28	10-5-'61
ஏழாம் வகுப்பு	1·75	13	16-5-'62

சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	*0·62*	...	...
மூன்றும் வகுப்பு	*0·75*	...	...

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	*1·87*	*44*	
செங்கற்பட்டு	*1·87*	*44*	
வட ஆற்காடு	*1·87*	*44*	
தென் ஆற்காடு	*1·87*	*44*	
சேலம்	*1·87*	*44*	*13-5-'59*
கோயம்புத்தூர்	*1·87*	*44*	
நீலகிரி	*1·87*	*46*	
திருச்சிராப்பள்ளி	*1·87*	*46*	
தஞ்சாவூர்	*1·87*	*46*	
மதுரை	*1·87*	*22*	
இராமநாதபுரம்	*1·87*	*22*	
திருநெல்வேலி	*1·87*	*22*	*16-5-'62*
கன்னியாகுமரி	*1·87*	*22*	
ஐந்தாம் வகுப்பு	*1·75*	*43*	*18-5-'60*

சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A., L.T.

ஆறும் வகுப்பு	*1.75*	*14*	*10-5-'61*

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A., L.T.

ஏழாம் வகுப்பு	*2.00*	*18*	*16-5-62*

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : R. சேஷாத்திரி, B.A., B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	0·75 ந. பை
செங்கற்பட்டு	0·75 ந. பை.
வட ஆற்காடு	0·75 ந. பை.
தென் ஆற்காடு	0·75 ந. பை.
சேலம்	0·75 ந. பை.
கோயம்புத்தூர்	0·75 ந. பை.
நீலகிரி	0·75 ந. பை.
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.
தஞ்சாவூர்	0·75 ந. பை.
மதுரை	0·75 ந. பை.
இராமநாதபுரம்	0·75 ந. பை.
திருநெல்வேலி	0·75 ந. பை.
கன்னியாகுமரி	0·75 ந. பை.
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.
ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	1·00 ந. பை.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும

ஆசிரியர் : பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·37	...	...
மூன்றும் வகுப்பு	0·44	...	...
ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc., L.T.			
நான்காம் வகுப்பு	0·62	30	13-5-'59

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

ஐந்தாம் வகுப்பு	1·25	26	18-5-'60

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

ஆறும் வகுப்பு	1·50	30	10-5-'61

துணைப்பாடப் புத்தகங்கள்

சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	0·50	15	18-5-'60

நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0·50	17	18-5-'60

அறிவுச் சுடர்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

ஆறும் வகுப்பு	0·62	10	10-5-'61

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

VI STANDARD FOR HIGH SCHOOLS	0-50	13	10-5-'61

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·25	25	10-5-'61
எட்டாம் வகுப்பு	1·75	21	13-5-'59

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·50	28	10-5-'61
ஏழாம் வகுப்பு	1·75	13	10-5-'65

சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், M.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·75	14	10-5-'61

சமூக நூல்

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62
மூன்றும் படிவம்	2·00	24	10-5-'61
பழைய எட்டு—புதிய ஒன்பதாம் வகுப்பு	2·50	35	16-5-'62

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

மூன்றும் படிவம்	0·75	4	10-5-'61

பொது விஞ்ஞானம்

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, B.A., L.T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1·50	30	10-5-'61
புதிய பதினோராம் வகுப்பு	2·50	35	10-5-'61

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர்: புலவர் சொ. முருகேசனார்

ஆறும் வகுப்பு	0·75	4	16-5-'62

மாணவர் இலக்கணம்

புதிய ஒன்பதாம் வகுப்பு	0·87	4	29-7-'59

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

புதிய பத்தாம் வகுப்பு	1·25	11	18-5-'60
புதிய பதினோராம் வகுப்பு	1·50	31	10-5-'61

ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj

Mother India Supplementary Reader VI Std.	0·50	13	10-5-'61
Mother India Supplementary Reader III Form.	0·62	24	10-5-'61

TAMIL NON-DETAILED

அறிவுச் சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A., L.T.

ஆறும் வகுப்பு	0·62	10	10-5-'61
நாடும் மக்களும்	1·00	17	18-5-'60
தொண்டை நாட்டு மன்னர்	1·00	19	18-5-'60
பூம்புகார்	0·87	16	10-5-'61
திரு. வி. க.	0·87	23	13-5-'59

ஆசிரியர்: லீலா பார்த்தசாரதி, B.A., L.T.

கணிதம் கற்பிக்கும் முறை	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர்: R. சேஷாத்திரி, B.A., B.T.

ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	1·00 ந. பை.
ஒன்பதாம் வகுப்பு	1·25 ந. பை.
பத்தாம் வகுப்பு	1·25 ந பை.
பதினோராம் வகுப்பு	1·50 ந.பை.

Edited Printed and Published by, P. VEERARAGHAVAN,
Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.